Mr. K. Anantharajah
Urumpirai East
Urumpirai



# தேர்த் திருப்பணி மலர்


## ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mr. K. Anantharajah
Sri Lanka



ஆளுடைத் தனி யாதியை நீத்தொரு
வேள்வி முற்ற விரும்பிய தக்கனார்
நீள்சிரத்தை நிலத்திடை விட்டிய
வான் படைத்த மதலையைப் போற்றுவோம்.

அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா ஆசிரியர்
உரும்பிராய்

## கல்வியங்காடு

## அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரசுவாமி தேவஸ்தானம்

# தேர்த் திருப்பணி மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கல்வியங்காடு

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத

ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

# தேர்த் திருப்பணி மலர்

தேர்த் திருப்பணிச் சபை வெளியீடு

21 - 04 - 1994

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவிலில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ வீரபத்திர சுவாமிக்கு புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் தேரின் வெள்ளோட்ட தின மான 1994 ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 21 ம் நாள் வியாழக்கிழமை தேர்த் திருப்பணிச் சபையினால் வெளிவருகிறது.

*மலர் தொகுப்பு:*

தேர்த் திருப்பணிச் சபை

*அருள்மிகு ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தானம்*

*கல்வியங்காடு*

*அச்சுப் பதிப்பு:*

*முல்லை அச்சகம்*

*ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்த் திருப்பணிச் சபை உறுப்பினர்

திரு. செ. இராசலிங்கம் [தலைவர்]
திரு. சி. கந்தையா [செயலாளர்]
திரு. ந. புவனேந்திரன் [இணைப் பொருளாளர்]
திரு. த. சம்பந்தர் [இணைப் பொருளாளர்]

திரு. நா. ஞானபாஸ்கரன்
திரு. ந. துரைசிங்கம்
திரு. த. வரதராஜன்
திரு. த. முத்துலிங்கம் J. P.
திரு. மு. க. சண்முகலிங்கம்
திரு.ச. பரஞ்சோதி

## பரிபாலன சபை உறுப்பினர் 1994

திரு. த. சம்பந்தர் [தலைவர்]
திரு. நா. ஞானபாஸ்கரன் [உப தலைவர்]
திரு. ச. பரஞ்சோதி [செயலாளர்]
திரு. நா. ஜெயகுலராசா [உப செயலாளர்]
திரு. செ. இராசலிங்கம் [பொருளாளர்]

திரு. க. நடராசா
திரு. பொ. தம்பிராசா
திரு. ந. துரைசிங்கம்
திரு. ஆ. பாலசுப்பிரமணியம்
திரு. க. ஸ்ரீரங்கநாதன்
திரு. சோ. சிவசுந்தரமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

தக்கன் கொண்டுள தானெனுந் தருக்கின் தன்மை சாம்பிட
முக்க ணனவர் முன்னர் முகத்தெழு முனிவிற் றோன்றிய
மிக்க வீரபத்திர சுவாமிநீ வீதி உலா வர
தக்க மாமணித் தேரினைத் தந்துளோம் அது எம் சமர்ப்பணம்.

கல்வியம்பதியில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திர காளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி வீதி உலா பவனிவர இறைவன் திருவருளால் புதியதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேரின் வெள்ளோட்டம் நடைபெறும் இந் நன்னாளில் இவ்வரிய விழாவினை மனதில் இருத்தும் முகமாக தேர்த் திருப்பணிச் சபையினரால வெளியிடப்படும் இச் சிறப்பு மலர் ஸ்ரீ வீரபத்திரப் பெருமானின் பாதாரவிந்தங்களில் பரிமளிக்கும் அற்புத மலராகுமென நம்புகின்றோம்.

சைவ உலகத்து சிவபக்தர்களும் அறிஞர்களும் கவிஞர்களும் பாவலர்களும் தங்கள் கட்டுரைகளாலும் கவிதைகளாலும் பக்திப் பாமாலைகளாலும் இம்மலரை மணம் வீசச் செய்துள்ளனர். இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய சைவ குருமார்களுக்கும் ஆதீனப் பெரியார் அவர்களுக்கும் சைவ அடியார்களுக்கும் புகழ் பூக்க வேண்டி இம்மலரை எம்பெருமான் பாதாரவிந்தங்களில் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

வணக்கம்

கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தான
தேர்த் திருப்பணிச் சபையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணங் கமழும் மலரின் உள்ளே . . .


- ஆசியுரைகள்
- தெய்வமும் நீதானையா !
- அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் வரலாறு
- மங்கள நாயகி சமேதருக்கோர் தீர்த்தம்
- எங்கள் தேர்த் திருப்பணி
- வருக புத்தேரே !
- தனிப்பெரும் சிற்பக்கலாமணி ஜீவரட்ணம்
- சித்திரத் தேரேறி பவனி வரும் திருநாள் 24-4-1994
- வீரபத்திரமூர்த்தி வழிபாடு
  திரு. எம். வேதநாதன் M. A.
- வீரபத்திரர் அவதாரம்
  கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை
- வீரத்திருமகன் வீரபத்திரன்
  திரு. சி. வேலாயுதம்
- தீமைகள் ஓட்டும் தேரோட்டம்
  பிரம்ஸ்ரீ வ. நகுலேஸ்வரக்குருக்கள்
- சௌந்தர்ய லஹரி வெளிப்படுத்தும் கல்வித் தரிசனங்கள்
  கலாநிதி சபா. ஜெயராசா
- இளமை நலங்கனியும் கடவுளர்
  வித்துவான் க. சொக்கலிங்கம் M. A.
- கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரசுவாமி கீர்த்தனைகள்
  பிரம்ஸ்ரீ ந. வீரமணிஐயர்
- வாழ்வும் பயனும்
  திரு. வே. ஞானகாந்தன் B. A.
- தேருரும் வீரபத்திரர்
  திரு. க. சி. குலரத்தினம்
- தேர்த் திருவிழாவும் சம்கார மூர்த்திகளும்
  நியாய சிரோன்மணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
- தேரேடும் திருக்காட்சி நாம் காணும் அருட்காட்சி
  சொல்லிசைச் செல்வர் க. ஆனந்தராசா
- நன்றி நவில்கின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் அவர்களின்

# ஆசியுரை

சைவ மெய்யன்பர்களே!

ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தான தேர் வெள்ளோட்ட விழா நிகழவிருப்பதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். ஆலய விழாக்களில் முதலிடம் வகிப்பது ரதோற்சவம். தேரின் அமைப்புப் பல தத்துவார்த்தங்களை உள்ளடக்கி விளக்குவன. அவற்றை ஆராய்ந்தறிபவர் சிலரே. நிலையில்லா வாழ்க்கையைத் தேர்ந்துகொள் என்பது தேர் மேல் விதானங்களில் ஆறு ஆதாரங்களையும், கீழ்தளத்தில் மானுட வாழ்க்கையை பிறப்பிலிருந்து இறப்புவரை உள்ள சரிதையையும் ஆலய மூலமூர்த்தியின் புராணவரலாறுகள் ஆதியனவற்றையும் சித்தரிக்கும் சிற்பங்களையும் காணலாம். முழு அமைப்பும் பிரபஞ்சத்தைக் குறிப்பதால் கடைசித் தளத்தில் ஆமை வடிவம் இது விஷ்ணு பகவானின் வராக அவதாரத்தைக் காட்டி நிற்கும். ஜாதி, உயர்வு, தாழ்வு, தனவந்தர், வறியர் என்றில்லாமல் ஒருமைவுடன் ஒன்றுபட்டு வடம் பிடித்து மகிழ்ந்து வழிபடும் திருநாள். மேலும் காக்கும் தெய்வமான வீரபத்திரக் கடவுளுக்கான இக் கைங்கரியம் ஆனதினால் சைவமக்கள் அப் பெருமானின் திருவருள் பெற்று உய்வு பெறுவது திண்ணம்.

துன்பம் நீங்கி எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும்.

ஸ்ரீலஸ்ரீ குருமஹாசந்நிதானம்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம், இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காதுரந்தரி

## செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின்

# ஆசியுரை

அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரப்பெருமானுக்கு அழகிய சிற்ப வேலைப்பாட்டோடு கூடிய தேர்த்திருப்பணி நிறைவுபெறுவது அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். நல்லோரைக் காக்கவும் அல்லோரை அடக்கவும் அவதாரம் செய்த மூர்த்தம் இதுவாகும். இன்றைய காலகட்டத்திலே அச்சமும் அவலமும் எம்மை வாட்டுகின்றது. ஆகவே 'அஞ்சேல் என்றருள் செய்வான் அமருங்கோயில்' தான் எமக்குத் தஞ்சமாக விளங்குகிறது.

எமது நாட்டுத் திருக்கோயில்களில் இன்று குடமுழுக்குகளும் திருப்பணிகளும் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பாக இடம்பெறுவது எம் மக்கள் ஆற்றிய புண்ணிய பயனாகும். இந்த வகையில கல்வியங்காடு வீரபத்திரர் திருக்கோயிற் திருப்பணிச்சபை முன் வந்து ஆற்றிவரும் இத் தெய்வீகப்பணி மிகவும் பாராட்டுக்குரியது. எனவே இப்பணியில் ஈடுபட்டுவரும் திருப்பணிச் சபையினர், தொண்டர்கள், சிற்ப சக்கரவர்த்தி திரு. சிவரத்தினம் அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாமி பிரேமானந்தா அவர்களின்

# ஆசியுரை

முன்னோர்கள் வணங்கி வந்த 'பத்திரகாளி சமேத வீரபத்திர பெருமாண்' ஆலயத்தை நல்ல முறையில் சீர்திருத்தி விழா நடத்தி சேவையாற்றி வருவது சிறந்ததே. மிகச் சிறந்த முறையில் ஒரு தேரினை உருவாக்கி அத்தேரில் பத்திரகாளி சமேத வீரபத்திர பெருமான் பவனி வர இருப்பது குறிப்பிடத் தக்கது. சக்திவாய்ந்த தெய்வம் பவனிவருகின்ற கண்கொள்ளா காட்சியினைக் கண்டு அருள் பெற்றிட அடியார்கள் பெற்ற பாக்கியமாகும். நல்லதொரு வாய்ப்பினை உருவாக்கி, நற்பணிகளை செய்திட முன்வந்த பக்தர்களுக்கு அம்பாளினதும் வீரபத்திரப்பெருமானினதும் அனுக்கிரகமும் எனது நல்லாசிர்வாதமும் என்றென்றும் உண்டு.

இறைவன் சேவையில்

சுவாமி பிரேமானந்தா.

ஸ்ரீ பிரேமானந்தா ஆச்சிரமம்,
பிரேமானந்தா நகர்,
விறலிமலை 621 316 (வழியாக)
தமிழ்நாடு, இந்தியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

## திரு. கா. மாணிக்கவாசகர் அவர்களின்

# ஆசியுரை

சமய வழிபாடு நமது வாழ்க்கையோடு இணைந்தது. சைவர்களாகிய நாம் நமது இம்மை மறுமை பயன்களை அடைய இறைவழிபாட்டினை கைக்கொள்கிறோம். ஆலயங்களில் செய்யப்பட வேண்டியவற்றை சிறப்புறச் செய்வது பண்டுதொட்டு நடைபெற்று வருகின்றது.

கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் கோவிலுக்கு திருத்தேர் செய்யப்பட்டு 'தேர் வெள்ளோட்டம்' நடைபெற இருப்பது மனநிறைவு தருகின்றது. சைவப் பேரன்பர் ஒன்று சேர்ந்து இத் திருப்பணி நிறைவேற திருவருள் கிட்டியுள்ளது. திருவிழாக்களில் தேர்த் திருவிழா அதிமுக்கியம் வாய்ந்தது. இறைவனின் பஞ்சகிருத்திய தொழிலில் அழித்தல் தொழிலை இவ்விழா குறித்து நிற்கின்றது.

தேர் வெள்ளோட்ட நிகழ்வுகள் சிறப்புற நிறைவெய்த எல்லாம் வல்ல எம்பெருமானை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

கா. மாணிக்கவாசகர்
யாழ். அரச அதிபர்

அரசாங்க செயலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா, ரொறொன்ரோ

ஸ்ரீ துர்க்காதேவி அம்பாள் ஆலய பிரதமகுருவும்

அறங்காவல் சபைத் தலைவருமாகிய

## சிவத்திரு. தியாகராஜக் குருக்கள் கணேஷ் சுவாமிகள் வழங்கிய

# ஆசியுரை

யாழ் கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்திற்கென தனியான சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு இன்று [1994 - 04 - 21] வெள்ளோட்டம் ஓடுகின்ற செய்தி கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். வட இலங்கையின் இன்றைய சூழ்நிலையிலும் பல லட்சம் ரூபாவில் உருவாக்கப்பட்ட சித்திரத் தேர் திருப்பணியானது எத்தகைய இடர்வரினும் எடுத்த இக் காரியத்தைக் கைவிடேல் என்ற மன உறுதிப்பாடுகொண்ட தேர்த் திருப்பணியின் அயராத உழைப்பின் உருவாக்கம் ஆகும். இத்திருப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிய திருப்பணிச்சபைக்கும், பக்கபலமாக உதவியவர்கட்கும் நன்கொடைகளை வழங்கியவர்க்கும் எல்லா நலன்களும் கிட்ட ஸ்ரீ வீரபத்திரர் அருள்வாராக. எல்லோருக்கும் எனது நல்வாழ்த்துக்கள்.

சிவத்திரு. தியாகராஜக்குருக்கள் கணேஷ் சுவாமிகள்

2691, Markham Road,
Unit 1, Scarborough,
Ontario, M 1X 1L 4, CANADA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர், பிரதேச சபை விசேட ஆணையாளர்

திரு. ஆ. மகாலிங்கம் அவர்களின்

# ஆசியுரை

ஸ்ரீ வீரபத்திரப் பெருமான் வீதிவலம் வருவதற்குப் புதிய சித்திரத்தேர் ஒன்று அமைக்கப்பட்டு அதன் வெள்ளோட்ட விழா நினைவாக மலர் ஒன்று வெளியிடப்பட இருப்பதாக அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த இக்கட்டான நேரத்திலும் எம் பெருமானின் திருவருளை நினைந்து இப்பெரு முயற்சியில் ஈடுபட்ட எல்லோரையும் பாராட்டுகின்றேன். நிலையில்லாத இந்த உலகத்தில் வாழ்கின்ற நாம் எமது வசதிகளைப் பெருக்குவதற்கு எவ்வளவோ பணத்தைச் செலவழிக்கின்றோம். சாதாரண வீடு போதாதென்று மாடி வீடுகளைக் கட்டுகின்றோம். குளிர் சாதன அறைகளை அமைக்கின்றோம். மோட்டார் வாகனங்களை வாங்குகின்றோம். ஆனால் எமது உயிருக்கு உயிராய் நின்று எம்மை ஆள்கின்ற எம் பெருமானுக்கு வீதிவலம் வருவதற்கு இரதம் ஒன்று அமைப்பது பற்றிச் சிந்திப்பது இல்லை. நாம் இன்றோ நாளையோ இவ்வுலகத்தை விட்டுச் சென்று விடுவோம். ஆனால் எம் பெருமான் இவ்வுலகம் அழிந்தாலும் தம் பேரருளினாலே எங்கும் நிறைந்திருப்பார் என்பதை நாம் உணர்வதில்லை. இந்த உண்மையை உணர்ந்து இப்புண்ணிய கருமத்தில் ஈடுபட்ட தங்களையும் தங்கள் ஊர்வாழ் மக்களையும் வாழ்த்துகின்றேன். எம் பெருமானின் திருவருள் எங்கும் பொலிந்து எமக்கு அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டுவதாக.

ஆ. மகாலிங்கம்

*விசேட ஆணையாளர்,*
*பிரதேச சபை, நல்லூர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி பிரதேச செயலர்

## திரு. இ. இளங்கோவன் அவர்களின்

# ஆசியுரை

தங்களின் ஆலயத்தில் நடைபெறுகின்ற தேர் வெள்ளோட்ட விழா வினையறிந்து இதற்கு ஆசியுரை வழங்குவதில் மிகவும் மகிழ்வடைகிறேன். இன்றைய ஓர் இக்கட்டான சூழ்நிலையிலும் இவ்வாறான தெய்வத் தொண்டினால் எங்களின் இறை வழிபாடு மேன்மை அடைகிறது.

எமது முன்னோர்கள் வாழ்க்கை வழிகள் பொதிந்த ஓர் சமுக உருவாக்கத்தின் வெளிப்பாடாக எம் சமய கிரியைகள் அமைந்துள்ளன. அந்த வகையில் சமுகத்தின் நீதிக்கும் வளமான வாழ்விற்கும் இத்தகைய வழிபாட்டு கோயில்கள் அடித்தளம் அமைகின்றன. இன்று பல்வேறு பொருளாதார நெருக்கடியிலும் இத்தகைய பண்பாட்டு கோலங்கள் எத்தகையதோர் இழப்பையோ தாக்கத்தையோ அடையவில்லை என்பதை இதன் ஆழ்ந்த பற்றுதல் வெளிக்காட்டி நிற்கிறது.

எனவே இதற்கு உழைத்த அனைத்து அடியவர்க்கும் வீரபத்திரக் கடவுள் தேர் உலாவந்து அருள் புரிந்து மேன்மை வழிகாட்ட வேண்டும் என பிரார்த்திக்கின்றேன். அத்துடன் அடியார்களுக்கு என் நன்றிகள்.

பிரதேசச் செயலகம்,
நல்லூர்.

இ. இளங்கோவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவத்தமிழ் வித்தகர்

## திரு. சிவ. மகாலிங்கம் B. A., Dip - in - Ed.

(விரிவுரையாளர் – பலாலி ஆசிரியர் கலாசாலை)

## அவர்களின் ஆசியுரை

ஆலயங்கள் இறைவன் வீற்றிருந்து திருவருள் புரியும் பெருங்கருணைத் தேக்கங்கள் ஆகும். எமது ஆலயங்கள் ஆன்ம லயத்துக்குரிய இடங்களாக இருப்பதோடு நமது பண்பாடு, பாரம்பரியம், கலைகள் ஆகியவற்றை பேணி வளர்க்கும் கேந்திர நிலையங்களாவும் விளங்குகின்றன. " திருக்கோவிலில்லாத திருவிலூர் அடவிகாடே " என்பது அப்பர் பெருமானின் வாக்கும் ஆகும். ஆலயங்களைத் தேடிச் சென்று வணங்குபவர்களின் உள்ளத்தில் ஆண்டவன் வீற்றிருப்பான் என்பதை

நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.

என்ற தவயோகியின் திருமந்திரப் பாடல் விளக்கி நிற்கிறது.

இந்து சமயத்தில் சமயமும் கலைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. நாம் வணங்கும் தெய்வ மூர்த்தங்களே கலை வடிவங்களாகத் திகழ்கின்றன. யோக தட்சணாமூர்த்தியாக இருக்கும் சிவன் வீணா தட்சணாமூர்த்தியாக சங்கீத சாஸ்திரத்தின் குருவாகவும் திகழ்கிறார். வேணுகோபாலன் தனது புல்லாங்குழல் இசையினால் அண்ட சராசரங்களையெல்லம் மகிழ்விக்கிறான். வித்யா தெய்வமாகிய சரஸ்வதி தனது கையிலே வீணையை வைத்து சதா, பரமேஸ்வரனின் லீலைகளை வீணாகானம் செய்கிறார். நந்திதேவர் தனது கையிலே வைத்து மத்தளம் அடிப்பதன் ஊடாக மிருதங்க வாத்தியத்திற்கே குருவாகத் திகழ்கிறார். ஆடவல்லானாகிய நடராஜன் தனது ஆடற் கலையினால் நாட்டிய சாஸ்திரத்துக்கே பிதாமகராகத் திகழ்கிறார்.

காவியம் படித்து உணர்வது, சிற்பமும் ஓவியமும் பார்த்து உணர்பவை சிறந்த ஒழுக்கமும், பக்தி, முதிர்ந்த உள்ளமும், மாசற்ற அகத்தூய்மையும் உடையவராக இருக்கும் சிற்பியால் தான் சிறந்த சிற்பங்களை உருவாக்க முடியும். மகோற்சவ கால நாட்களில் தேர் உற்சவம் மிக முக்கியமான திருவிழாவாக நடைபெறுகிறது. மனிதனின் தேகத்தை உருவகிக்கும் ரீதியில் தேர் அமைந்துள்ளது எனவும் அதன் சிங்காசனமே மனித இருதயத்தின பிரதியம்சம் எனவும் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தரசர்களின் ஆட்சிக் காலத்திலே சித்த வைத்தியத்துறைக்குத் தேவையான மூலிகைச் செடிகள் பல வளர்க்கப்பட்ட இடமாகிய கல்வியங்காட்டிலே பத்திரகாளி சமேதராக இருந்து, அருளாட்சி புரியும் வீரபத்திரப் பெருமானுக்கு பக்தர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து சித்திரத்தேர் அமைத்திருக்கிறார்கள். சித்திரத்தேரிலே பல அழகான சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சித்திரத்தேரின் சிம்மாசனத்தில் பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரப் பெருமானை இருத்தி பக்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி வடம் பிடித்து " அரோகரா " கோஷம் கூறித் தேரை இழுக்கும் காட்சி அற்புதமானதாக அமையும் நமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள் எல்லாம் நீங்கி அமைதியான வாழ்வு அனைவருக்கும் பூரணமாகக் கிடைக்க வீரபத்திரப் பெருமானின் திருவருள் கிட்ட வேண்டுமென அவரின் பாதாரவிந்தங்களை சிக்கெனப் பிடித்து வணங்குகிறேன்.

இன்பமே சூழ்க ! எல்லோரும் வாழ்க !

பலாலி ஆசிரியர் கலாசாலை, திருநெல்வேலி. சிவ. மகாலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசக் கல்விப் பணிப்பாளர்

## திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களின்

# ஆசியுரை

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்க ஆன்மீகத்தொண்டர்கள் ஆற்றிய பணிகளை எண்ணிப்பார்க்கிறேன். நீறில்லா நெற்றிபாழ் என்ற ஒளவையின் பொன்மொழியைச் சிந்திக்கிறேன். சிவபூமியெனத் திருமூலரால் அழைக்கப்பட்ட ஈழத்தின் வடபால் விளங்குவது யாழ்நகர். இதற்கு வீணாகானபுரமென்றொரு பெயர் உண்டு. இந்த இசை மலிந்த பூமியிலே ஈழத்துத் திருவாரூரிலே சைவமும் தமிழும் தழைத்தோங்க வந்த பரம்பரையில் பிறக்க வாய்ப்பளித்த ஆடற் திருமகன் கூத்தப்பெருமானுக்கு நன்றியுள்ளங் கொண்டவனாய் சைவத்திருப்பணிகளை எண்ணிக் களிப்பதில் வியப்பொன்றில்லை. கல்வியங்காடு வீரபத்திரர் தேருலாவரச் சித்திரத்தேர் இழைத்தமையையிட்டு வெளிவரும் மலருக்கு ஆசி செய்தி வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைவதோடு ஆன்ம திருப்தியும் பெறுகிறேன்.

துஷ்ட நிக்கிர சிஷ்டபரிபாலனன் உமைபாதிகொண்ட ஆதிமுதல்வன். அவனது நெற்றிக் கண்ணில் மறம்மடிய அறம் தழைக்க வந்தவன் வீரத்திருமகன் வீரபத்திரன். அறநெறி தழைக்க வந்த வள்ளலை வணங்கிப் பெருமை பெறுவது எங்கள் பணியேயாம்.

உள்ளக் கமலம் உத்தமரை வேண்டுவது என விபுலானந்தன் கழறினான். அத்துணைக்கு அகவிருளைப் போக்கி அரன் சேவடிக்கு எம்மை இட்டுச்செல்வதற்கு ஆலயங்கள் இன்றியமையாதவை. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாமெனக் கூறினர் முன்னோர்.

இசையால் மசியும் இறைவனுக்கு நாவார இசைபாடி உள்ளக் கமலத்தை மலராக்கி உணர்வுபூர்வ பக்தியைப் பன்னீராக்கி என்னாளும் வாழக் கற்றுக்கொள்வோமாக. செந்தமிழ் நாட்டிடையுள்ள செம்மல்கள் சிவப்பணி செய்து வையத்து வாழ்வாங்கு வாழவேண்டும். வையகம் பயனுற வாழவேண்டும். தெய்வத் திருப்பணி மலியட்டும். இராவணன் மேலது நீறு என்ற சம்பந்தன் வாக்கு எம் மக்கள் தூய வெண்ணீறு துதைந்த மேனியராய்ச் சிவனடி மறவாச் சிந்தையராய் வழி சமைப்பதாக.

பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

இரா. சுந்தரலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியா சாகர நியாய சிரோன்மணி

## கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களின்

# ஆசியுரை

கல்வியங்காடு அருள்மிகு வீரபத்திர கோவில் புதிய தேர் செய்யப்பட்டு அதில் ஆண்டவன் பவனி வரப்போவதைக் கேட்க ஆனந்தமடைகின்றோம். இந்த தேர் உற்சவத்தினால் மக்களுக்கு இடையூறு செய்யும் அரக்கர்கள் அழிந்து உலகில் சுபீஷமும், அமைதியும், மகிழ்ச்சியும் ஏற்பட வேண்டுமென்றும் இதை உருவாக்கிய சிற்பிகளுக்கும் திருப்பணிச் சபையாருக்கும் குருக்களுக்கும் இதை தரிசித்து மகிழ்ந்து ஆரவாரம் செய்யப்போகும் மக்களுக்கும் வீர பத்திரர் அருள் கிடைக்க வேண்டுமென அவன்தாள் நினைந்து ஆசி கூறுகின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

சுபம்.

நல்லூர். கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா ஆசிரியர்
உரும்பிராய்

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்

# திரு. சி. கனகரத்தினம் J. P. U. M. அவர்களின்

# ஆசியுரை

உடம்பினுள் உத்தமனைக் காண் என்கின்றனர் தத்துவஞானிகள். உத்தமன் - இறைவன் ஆலய அமைப்பு உடம்பின் அவயவ அமைப்போடொத்தது. முதலாம் இரண்டாம் மூன்றாம் விதிகள் அதி சூக்கும, சூக்கும தூல தேகங்களாகும்.

இறைவன் ஆன்மாவோடு இரண்டறக்கலந்திருக்கின்றான். அவனைத் தன்பால் காண்டாலே ஆன்ம விமோசனம். காண்டற்கு உபகரிக்கப்பட்டதே இந்த உடம்பு.

உடம்பைப் பேணுகிற முறையிற்பேணி பரமான்மாவாகிய இறைவனைத் தரிசித்தற்கு வழிசெய்வதே ஆலயம். ஆலயவழிபாடு அகத்தே இறைவனைத் தரிசித்தற்குச் செய்யும் புற முயற்சியாம். புறமுயற்சியே எனினும் அக முயற்சிக்கு மிக மிக இன்றியமையாதது ஆலய வழிபாடு. 'ஆலயந் தொழுவது சாலவு நன்று' என்பது ஆழ்ந்து சிந்திக்கற்பாலது. ஆலய அமைப்பு, உடம்பினுள் உத்தமனைக் காண்டற்கு உபகாரமாயமைந்திருப்பதுபோல, இறைவன் விசேட காட்சியளிக்கும் பொருட்டு எழுந்திருக்கின்ற சித்திர தேரமைப்பும் பெரிதும் சிந்தனைக்குரிய பேருண்மையைப் புலப்படுத்துவதாய் அமைந்திருக்கின்றது.

ஆன்மாவையும் ஆன்மா மூலம் உடம்பையும் இயக்குபவன் இறைவன். அவ்வாறே அவன் ஒருவனே அண்டசராசரமனைத்தையும் இயக்குகிறான் என்பதைச் சித்திரத் தேர் தன் அமைப்பு விசேடத்தாற் புலப்படுத்துகின்றது.

'அவனின்றி ஓரணுவும் அசையாது' அண்டசராசரமனைத்தையும் இயக்குபவன் அந்த இறைவன் ஒருவனே என்பதைத் தேர்த்திருவிழா நமக்கு எடுத்துக்காட்டுவதாய் இருக்கின்றது.

கொல்லுவோன் கொல்லப்படுவோன் இருவர் மட்டும், உள்நின்று இயக்குபவர் ஒருவனே என்றார் மகான் அரவிந்தர்.

எந்தக் கருமத்தை எடுத்துக்கொள்ளும்போதும், உள்நின்று இயக்குவோன் கருத்து என்னை என்ற விசாரம் எழவேண்டும். அவ்வாறாய விசாரம் எழுவதே தேர்த்திருவிழாவெய்தும் பயனாகும்.

எங்கும் சைவ ஆலயத் திருப்பணிகள் நடப்பதைப் பார்த்து மனமகிழ்கின்றோம். ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு நித்தியபூசைகள் அன்போடு நடத்தப்பட்டால் நாட்டில் செல்வம் பெருகும். சமாதானம் நிலவும் இன்பம் கொழிக்கும்.

வீரபத்திரப்பெருமானுக்கு ஒரு புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டிருப்பதையிட்டு ஆனந்தம் அடைகிறேன். இக்காலத்தில் எவ்விஷயத்துக்காவது பணம் சேகரிப்பது எளிதான காரியமல்ல ஆகவே இத்தொண்டை நிறைவேற்றியது மிகவும் மெச்சத்தக்க ஒரு சாதனையாகும்.

இப்பெரும் கைங்கரியத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அன்பர்களையும் சுய நலமில்லாத தொண்டுகள் புரிந்த அனைவரையும், சிவாச்சாரியப்பெருமக்களையும், ஸ்தாபதியார், சிற்பாசிரியர்களையும், ஆலய அறங்காவலர்களையும் உளமாரப்பாராட்டி எனது ஆசிகளை வழங்குகின்றேன்.

சி. கனகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகம ஞானபாஸ்கரன்

## சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

" ரதிப்யநம, அரதேப்யச்சநம
நமோ ரதேப்ய, ரதபதிப்யச்சநம "

மேற்கூறிய மந்திரமும் ஸ்ரீருத்ரத்தில் நடுவில் வருகிறது. சிவபெருமானை விளித்துக் கூறும் இம்மந்திரத்தின் பொருள் தேரில் சென்று கொண்டும், தேரில்லாமல் சென்று கொண்டும் இருக்கும் பரமேஸ்வரரே உமக்கு நமஸ்காரம்.

தேர்களாகவும் தேரின் தலைவர்களாகவும் உள்ள பரமேஸ்வரரே உமக்கு நமஸ்காரம். ஆகவே பரமேஸ்வரரே தேருக்கு ஒப்பாக கூறப்பட்டிருக்கிறார். இத்துணை பெருமை வாய்ந்தது தேராகக் கூறப்படுகிறது. மஹோற்சவ காலத்தில் பூர்த்தி உற்சவமாகவே தேர் உற்சவம் நடைபெற்று வந்திருக்கிறது. பிற்காலத்தில் தேர் உற்சவத்தின் பெருமை உணரப்பட்டு அது பூர்த்தி தினத்திற்கு முதல்நாள் எல்லா ஆலயங்களிலும் நடைபெற்று வருகிறது. தேரிலே ஆறு அற்வாக்கள், 36 தத்துவங்கள், சூரிய சந்திரர்கள், நான்கு வேதங்கள், சப்த மாத்ருக்கள் அஷ்டகஜ, அஷ்டபர்வத, அஷ்டநாக, சப்த ரிஷிகள் எல்லோரும் சான்னித்யமாக இருக்கிறார்கள். தேரில் சுவாமி ஆரோஹணித்து வீதியுலா வரும்போது சுவாமி, பக்தர்களுக்கு மாத்திரமல்லாமல், பாபி, ரோகி, சண்டாளன் எல்லோருக்குமோ. தர்சனம் கொடுத்து அனுக்கிரகிக்கிறார். ஆகையாலேயே தேர் உற்சவம் நிறைவெய்தியவுடன் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறுகிறது. ஆகவே எல்லா ஆலயங்கட்குமே சித்திரத்தேர் அவசியமாகிறது. இதையுணர்ந்த கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய அடியார்கள் தங்கள் ஆலயத்திற்கும் புதிதாக ஒரு சித்திரத்தேரை நிர்மாணித்து இருக்கிறார்கள். அந்த ஆலயத்தில் நடைபெற்ற இரு கும்பாபிஷேகங்களில் அடியேன் பங்கு பற்றக்கூடியதாக திருவருள் அமைந்திருந்தது, சிறப்புமிக்க தேவாலயமாகவும் திவ்யமான பரிபாலனத்தோடும் நடைபெறுகின்ற இவ்வாலயத்தின் ரத வெள்ளோட்ட உற்சவம் சிறப்பாக நடைபெற இறைவன் திருவருள் கிடைக்கும் வண்ணம் ஆசி வழங்குகிறேன்.

தா. மகாதேவக்குருக்கள்

அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்,
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவஸ்ரீ சதா. யோகீஸ்வரக்குருக்கள் (ராஜாஜி)

## அவர்களின்

# ஆசியுரை

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்'

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நல்லூர் முருகன்கோயிலின் வடபால் கற்றோரும் நற்குணவான்களும் கலைகள் பல நிறைந்து கண்ணியமாக வாழும் மக்களைக் கொண்டதுமான கல்வியங்காடு என்னும் பதியில் மக்களின் இன்னல்களைக் களைய கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் போகசக்தியாம் பத்திரகாளி சமேத வீரபத்திரருக்கு அவ்வூர் பெருமக்களின் பெருமுயற்சியினாலும் தெய்வீகக் கலைகட்டும் இன்முகம் கொண்ட திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஜீவரத்தினம் ஆச்சாரியார் தன் மனக்கண்ணில் தோன்றும் அரும் பெரும் சிற்பக்கலை வண்ணத்தில் உருவாக்கிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாக்காணும் அடியார்கள் தேவஸ்தானத்தை வழிநடத்தும் வரதராசக் குருக்களின் மனம்போல் ஆலயத் திருப்பணிகள் யாவற்றையும் நிறைவுறப்பணி செய்யும் நிர்வாக சபையினருக்கும் இம்மலரை வெளியிடும் தேர்திருப்பணிச் சபையினருக்கும் சித்திரத்தேர் திருப்பணியில் ஈடுபாடுகொண்ட அனைவரையும் உருகும் அடியார் உள்ளூற உள்ளே ஊறும் தேனாக அழுது தொழும் அடியார் இடர்களைப்போக்கும் கருணை உள்ளங்கொண்ட வீரபத்திரப்பெருமான் பாதார கமலங்களை நினைந்து எம்பெருமான் தேர் திருவிழா திருவீதி வலம்வந்ததும் எலலா மக்களின் இடர்களை நீக்கி பேரானந்த பெருவாழ்வு வாழ்த்தி அமைகின்றேன். என்றும் என் நல்லாசிகள்.

சிவஸ்ரீ சதா. யோகீஸ்வரக்குருக்கள் (ராஜாஜி)

சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானம்,
நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய பிரதம குரு

சிவஸ்ரீ பொ. வரதராஜக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானுக்குப் புதிய சித்திரத் தேர் உருவாகியமை அனைவர்க்கும் பேரானந்தத்தை தருகிறது. ஆலயங்களிலே நடைபெறுகின்ற மகோற்சவத்தில் பஞ்சகிருத்தியத்தின் தத்துவங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடற்குரியது. துவஜாரோகணம் சிருஷ்டியையும் உற்சவங்கள் திதியையும் இரதோற்சவம் சம்ஹாரத்தையும் தேரடி உற்சவம் திரோபவத்தையும் தீர்த்தோற்சவம் அனுக்கிரகத்தையும் குறிக்கின்றது.

இவ்வாறு இரதோற்சவத்தை மையமாகக் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள்பாலிப்பதற்கு சித்திரத்தேர் மிகவும் முக்கியமான தொன்றாகும். ஸ்ரீ வீரபத்திரப் பெருமானுக்கு நீண்ட நாட்தேவையாக இருந்த தேரை அடியார்களின் ஒத்துழைப்புடன் தேர்த் திருப்பணிச் சபையாரின் பெருமுயற்சியால் திரு. ஆ. ஜீவரத்தினம் குழுவினரால் மிகவும் அழகாக நிர்மாணிக்கப் பெற்றமை பாராட்டுக்குரியதாகும் .ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திர பெருமானின் பாதார விந்தங்களை வழுத்தி சித்திரத் தேர் வெள்ளோட்ட நன்னாளில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொ. வரதராஜக் குருக்கள்

ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்
கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த் திருப்பணிச்சபைத் தலைவர்

திரு. செ. இராசலிங்கம் அவர்களின்

# ஆசியுரை

இவ்வுலகில் பிறந்த மக்களாகிய நாம் எமது வாழ்க்கைத்தேர் பல வளங்களாலும் சிறப்புற்றோங்க எமது இருதயமாகிய பீடத்திலே எம்பெருமானை என்ஞான்றும் எழுந்தருளச் செய்து நமது வாழ்க்கை சீரும் சிறப்புமான பாதையில் வழிநடத்திச் செல்வ இறைவழிபாடு இன்றியமையாததாகும். பல தத்துவங்களை உள்ளடக்கிய தேர்த்திருவிழாவானது மஹோற்சவ விழாக்களில் மிகச் சிறப்புடையதாகும்.

கருணைக் கடலாம் வீரபத்திரப் பெருமான் புதிய சித்திரத்தேரில் 1994 ஆண்டு சித்திரைத் திங்கள் 24 ஆம் நாள் பவனிவந்து அருள்பாலிக்கவுள்ளார். இச் சித்திரத்தேரை ஆக்குவதில் எமது மக்கள் சகல திருவருட் செலவங்களையும் வாரிவழங்கி இடையறாத் துணையாகவும் இருந்தனர். அகோரமூர்த்தியானாலும் அருள் பொழியும் பெருமான் அருளாலே ஒரே ஆண்டில் தேர் வெள்ளோட்டம் நடைபெற அருள்பாலித்துள்ளமையை நாம் போற்றுவோம்.

தனிப்பெரும் தத்துவத்தையும் சிறப்பையும் உடைய சித்திரத் தேரை ஆக்கித்தந்த ஆச்சாரியார் அவர்தம் உதவியாளர்களும் இறைவனின் கருணையை பெற்றவர்கள். அவர்களை நாம் போற்றுகின்றோம். பாராட்டுகிறோம். இத் தேரை ஆக்குவதில் ஆர்வம் கொண்டுழைத்த இளைஞர்களுக்கும் எமது உறு துணையாக இருந்த பரிபாலன சபையினருக்கும் கருமமே கண்ணாயிருந்து கடமையாற்றிய தேர்த்திருப்பணி சபையினருக்கும் தீர்க்க ஆயுளும சகல கைங்கரியங்களிலும் ஈடுபட்டுழைக்கும் வல்லமையும் வழங்க எம்பெருமானை வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

செ. இராசலிங்கம்
தலைவர், தேர்த் திருப்பணிச்சபை

ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்
கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனசபைத் தலைவர்

## திரு. த. சம்பந்தர் அவர்களின்

# ஆசியுரை

பத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திரர் ஆலயம் மிகப் பழமை வாய்ந்ததென கர்ணபரம்பரையாகக் கேட்டுள்ளோம். யாழ் நகரின் வடபாலமைந்த நல்லூர்ப் பதியின் கல்வியங்காடு என்னும் கிராமத்தில் தன் மெய்யடியார்களுக்கு திருக்காட்சி கொடுத்தருளவும், திருவருள் புரிந்த வண்ணமும் விளங்கும் எம்பெருமான் திருவருளைப் போற்றுவோமாக.

எம் பெருமான் திருவுளங்கொண்டதனாற் போலும் இவ்வாலயம் பரிபாலனசபை நிர்வாகத்திற்கு வந்தபின் அடியார்கள் வியப்புறும் வகையில் சிறப்புடை வளர்ச்சியைக் கண்டுள்ளது. எங்கள் ஒவ்வொருவரது உள்ளங்கள் உவர்ந்து பூரிப்படைந்துள்ளமையும் இதன் வளர்ச்சியே காரணம் என்பது வெளிப்படையாகும். இன்று சகல பரிவார மூர்த்திகளோடும் அருள் கொடுக்கும் அகோர மூர்த்தியாம் கருணை மழை பொழியும் வீரபத்திரப் பெருமான் பதினெட்டு ஆண்டுகளில் இரண்டு மகா கும்பாபிஷேகங்களை கண்ட பெருமையை உடையவர். அதனாற்போலும் அவரை அண்டிய அடியவர்கள் சீரும் சிறப்புடன் வாழ்கின்றனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்தன. இப்பொழுது மகோற்சவங்கள் மூன்றாண்டுகளாக நடைபெற்றபோதும் கட்டுத்தேரில் சுவாமி பவனி வந்து அருள் பொழிந்துள்ளார். இத்துணை அருள்பொழியும் பெருமானுக்கு சித்திரத்தேர் செய்ய வேண்டி பொது மக்கள் தேர்த்திருப்பணிச் சபையைத் தெரிவுசெய்துள்ளனர். எமது அடியார்களின் அரும்பெரும் நிதியுதவியினாலும் திருப்பணிச் சபையாரின் அயராத முயற்சியினாலும் இன்று (24-4-94) வெள்ளோட்டம் காணும் சித்திரத்தேர் மிகக் குறுகிய காலத்தில் உருவாக்கப்பட்டது எம்பெருமான் அருள்போலும்.

ஆலய வளர்ச்சிக்கு இதுவரை தொண்டாற்றிய தொண்டர்களை நாம் இன்று நினைவு கூருவோம். அவர் காட்டிய வழியிலேயே நாம் முன்னேறுகின்றோம். இன்று இவ் அழகிய சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பாசாரியர் திரு. ஆ. சிவரத்தினம் அவர்களுக்கும் அவரோடு உறுதுணையாக இருந்த கலைஞர்களுக்கும் தம் தொண்டை சிரமேற் கொண்டுழைத்த திருப்பணிச் சபையினருக்கும் நிதியுதவியும் பொருளுதவியும் வழங்கிய அடியார்களுக்கும் எமது நல்லாசிகள் உரித்தாகுக.

இந்த சித்திரத் தேர் வெள்ளோட்ட மலரை பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி திருவடிகளில் அன்புடன் அருட்சித்து இது வாடாமலராக ஒவ்வொருவர் கரங்களிலும் பொலிவுற்று விளங்கி நறுமணம் வீசவும் அருள்பாலிக்க வேண்டுகின்றேன். பரிபாலன சபை இனி மேலும் ஆற்றவிருக்கும் திருப்பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து உதவ இறைவன் திருவருள் பாலிக்கவும் வேண்டி நல்லாசி கூறுகின்றேன்.

த. சம்பந்தர்
தலைவர், பரிபாலனசபை

ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்,
கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலனசபைத் செயலாளர்

## திரு. சின்னத்தம்பி பரஞ்சோதி அவர்களின்

# ஆசியுரை

கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திர ஆலய தேர்த் திருப்பணிச் சபையினரின் தேர் வெள்ளோட்ட மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பரிபாலன சபையின் செயலாளர் என்ற வகையில் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

இன்று நாட்டில் அமைதியற்ற ஓர் நிலையில் எமது கிராம மக்கள் இவ்வாலய வளர்ச்சியில் பெரும் ஆர்வம் கொண்டு கூட்டுமுயற்சியாக செயற்படுத்தி நிறைவு செய்த மகிழ்வின் பிரதிபலிப்பே இம் மலர் வெளியீடாகும்.

தேர்த்திருப்பணிச் சபையினரின் அனைத்து செயற்பாடுகளுக்கும் எமது பரிபாலன சபையும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. தேர்திருப்பணிச் சபையினர் தம்மிடம் வழங்கப்பட்ட பாரிய இப் பணியை சிரத்தையுடன் சிந்தனையுடன் ஒன்றிணைந்து செயற்பட்டதை நான் பாராட்டுகிறேன். இவர்களின் ஒன்றிணைந்த செயற்பாடே ஓராண்டிலே இப் புதிய தேர் பூர்த்தியாக அவனருளால் கிடைக்கப்பெற்றதென்பதில் ஐயமில்லை. எனவே இம்மலர் ஏனைய பணிகளுக்கு அச்சாணியாக அமைந்து, இவ்வாலயத்தின் புதிய புதிய திருப்பணிகளையும் ஆக்க எம்பெருமான் வளம் கொடுக்கவேண்டுமென வாழ்த்து தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இம்மலர் வாடாமலராக எம் மக்களினது கைகளில் தேன் சிந்தும் மலராக என்றென்றும் மிளிர எல்லாம்வல்ல வீரபத்திர பெருமானை வேண்டுகிறேன்.

சின்னத்தம்பி பரஞ்சோதி
செயலாளர் பரிபாலனசபை

ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்
கல்வியங்காடு.

சமாதான நீதவான்

## திரு. க. முத்துலிங்கம் அவர்களின்

# ஆசியுரை

ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரப்பெருமான் திருப்பாதத்தில் அடியேன் சரணம்: இதய சுத்தியுடன் இறைவணக்கம் செய்தலே மனிதனுடைய தலையாய கடன் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்' எனும் வள்ளுவர் வாக்கிற்கமைய மீண்டும் பிறவாமை வேண்டி நல்லன கொண்டு தீயன ஒதுக்கி வாழ்வோமாக. எல்லாம் இறைவன் செயல்.

சிறுபராயம் தொட்டே எமது கிராமத்தின் காவல் தெய்வமாக இடரேதுமின்றி எமைப் பரிபாலித்துவரும் எம்பெருமானின் ஆலய வளர்ச்சியில் எனக்கு மிகுந்த ஈடுபாடு. சர்வ வல்லபியான அவர், தனது மெய்யடியார்களை மனம் குளிரச்செய்து துவஜாரோகணம் வரை உயர்த்திவிட்டார். இருப்பினும் எங்கள் வீதியைத் 'தேரோடும் வீதி' யெனப் போற்றும் நாள் என்னாளோ என நான் ஏங்கினேன் பெருமான் அதற்கும் வித்திட்டு அறவீரர்களைக் கொண்டதோர் தேர்த் திருப்பணிச்சபையை உருவாக்கினார். அயராது அரும்பாடுபாடுபட்ட அவர்களையும் எமது கலைப்பொக்கிஷமான சிற்பக் கலைஞரையும் அவரது உதவுநரையும், இந்நன்னாளிலே பாராட்டி நன்றிகூறி நல்லாசிகளையும் வழங்குகிறேன்.

திருத்தல மகோற்சவங்களுள் 'இரதோற்சவம்' இறைவனின் சங்கரிப்பை குறிப்பதாகும். பூமியையே இரதமாக, மனிதரிடத்துள்ள மும்மலங்களாகிய ஆணவம், கர்மம் மாயை ஆயனவை அழித்தலே சங்காரமாகும். ஆண்டவனுக்கு பிரியமான நல்ல மனிதர்களாக கடவுள் கோவில் கொள்ளக்கூடிய இதயப்பண் செய்ய இந்த இரதோற்சவத்துடன் திடசங்கற்பம் எடுக்கவேண்டியும் பெருமானுடைய பூரண அருளைப்பெற்று மக்களெல்லாம். சுபீட்சத்துடனும் அறனுடையவர்களாகவும் வாழவேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசியும் கூறுகிறேன்.

இந்த இக்கட்டான காலகட்டத்திலும் எமது தேர்த்திருப்பணிக்கு நன்கொடைகளை வாரி வழங்கிய வள்ளல்கட்கும் சகல ஆசிகளும் உரித்தாகுக. நமது இளந்தலைமுறையினருக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்த இத் திருப்பணி எமது கிராமத்தில் மேன்மேலும் அபிவிருத்திகளுக்கு அடிகோலும் என நான் பூரணமாக நம்புகிறேன். அவர்களுக்கும் என் உளமார்ந்த ஆசிகள்.

வாழ்க எம்பெருமான் புகழ்! வளர்க நம் சமுதாயம்.

க. முத்துலிங்கம்

*'முத்தகம்'*
*விளையாட்டரங்கு வீதி,*
*கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான பாஸ்கரோதய சங்கத் தலைவர்

## திரு. கோ. சிவசுந்தரமூர்த்தி அவர்களின்

# ஆசியுரை

அற்புதங்கள் பல புரிந்து நாடி வந்தோர்க்கெல்லாம் அபயம் அளித்து அருள் பாலிக்கும் கருணைக் கடலாம் அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்ட சிறப்பு மலருக்கு ... கிராமத்தின் அறிவாலய மாக விளங்கும் ஞானபாஸ்கரோதய சங்கமும் ஆசிச்செய்தி அளிப்பது சாலவும் பொருத்தமே!

மக்கள் தேவைகளை நிறைவேற்றிச் சாதனங்கள் பல புரிந்து இவ்வாண் டில் பவள விழாக் காணும் நமது நிலையத்திற்கு அருள்மிகு வீரபத்திரப் பெருமானின் திருவீதியில் புதிய சித்திரத்தேர் பவனி வருவது புதிய நம்பிக் கையையும் புத்துணர்வையும் எமக்கு அளிப்பதில் ஆச்சரியமில்லை .....

எமது செயற்பாடுகளுக்கெல்லாம் வல்லமை அளித்த அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் சித்திரத் தேரில் ஆரோகணித்து வரும் அழகை ஆனந்திக்கும் எண்ணற்ற அடியவர்களுடன் நமது நிலையமும் இணைந்து கொள்கிறது.

சமயமும் சமூகமும் இரு வேறு துறைகள் தான், ஆனால் இரு துருவங் கள் அல்ல. ஆக்க பூர்வமான பணிகளுக்கெல்லாம் அவை ஒன்றிணைய வேண்டும். சமூகப் பணிகளுக்கு ஆலயங்கள் அதே போல ஆலயப்பணி களுக்கு சனசமூக நிலையங்களும் சேர்ந்து செயற்படல் அழகே.

ஆலயங்களும் சனசமூக நிலையங்களும் மனித சமூகத்தை நெறிப்படுத்தி வளப்படுத்தும் சாதனங்கள். பண்பாட்டை உயர்த்துவதை உன்னத இலட்சிய மாகக் கொண்டவை. பொது மக்களும் இதே அடிப்படையில் ஆலயங்களுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் உதவுவதையும். ஆதரிப்பதையும் அடிநாதமாகக் கொண்டு நடந்தால் எதிர் காலம் ஒளிமயமாக அமையும் என்பது எமது நம் பிக்கை.

புதிய சித்திரத் தேரும் தீர்த்தக்கேணியும் ஒரே ஆண்டில் பூர்த்தியாகும் வரலாற்றுச் சிறப்பான நிகழ்வுகளை நெஞ்சம் நிறைந்த மகிழ்வுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்.

கோ. சிவசுந்தரமூர்த்தி

ஞானபாஸ்கரோதய சங்கம்,
கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வமும் நீதானையா!

தாளம் : ஆதி　　　　　　　　　　　　இராகம் : மோகனம்

தக்கன் தலையறுத்து தன்முனைப்பை
ஒடித்து மிக்கதோர் செயல் தந்தவா - வீர
பத்திரா எனை வென்றவா.

பற்றினில் உனைச் சேர்த்து பக்தியில் புகழ்பாடி
நித்தமும் தொழுதேனையா - குல
தெய்வமும் நீதானையா.

கல்வியங்காடமர்ந்து வல்வினை தனைக் களைந்து
எல்லையில் அருள் கூட்டினாய் - பக்தர்
தொல்லைகள் நீ மாற்றினாய்.

பத்திர காளியுடன் பக்கத்தே நீயமர்ந்து
வித்தகம் நீ காட்டுவாய் - தெய்வ
சொத்துனை நாம் பாடுவோம்.

தாளம் : ஆதி　　　　　　　　　　　　இராகம் : மத்தியமாவதி

இருள் போக்கி அருளீந்து இரு வினையும் களையும்
பொருளாகி நின்றாயே புகழ் தொடுத்துப் பாடிடவே.


அறிவாகி உலகெல்லாம் ஆக்கி அழித்து நிற்கும்
நெறியா வீரபத்திரா நின்னடியைச் சூடுகின்றேன்.

குறியாகித் தெய்வமென கும்பிடுவோர் நெஞ்சமதில்
நிலையாகி நின்றிருக்கும் கள்ளியூர்ப் பெருவள்ளல்.


அருளாகி அமுதமென அற்புத நற்சுவையின்
பெருமானாய் இங்கமர்ந்த பெருமைக்கு ஈடுமுண்டோ.

வே. ஞானகாந்தன் பி. ஏ.
அதிபர்
யா / கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்வியங்காடு அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திர சுவாமி
ஆலய அருட்காட்சி



1990-ம் ஆண்டு ஆனித் திங்கள் 3-ம் நாள்
குடமுழுக்க வைபவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவஸ்ரீ பொன்னையாக்குருக்கள்
வரதராஜக்குருக்கள்
தேவஸ்தான பிரதம குருக்கள்




சிற்பச் சக்கரவர்த்தி, சிற்பராஜசிம்மன், சிற்பரதவித்தகர்,
சிற்பகேசரி, சிற்பகலாமணி,
ஸ்தபதி ஆறுமுகம் ஜீவரட்ணம் ஆச்சாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதிய சித்திரத்தேர் ஆரம்பநாள் வைபவம்



1993-07-3 ஆம் நாள் தேரின்
அடித்தள நாட்டு விழா
சிற்பாசாரியார் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பவளக்கால் நாட்டல் வைபவம்



1993-10-29 ஆம் நாள்
தேரின் பவளக்கால் நாட்டல் விழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]



[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய வரலாறு

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற எக்காலத்துக்கும்பொருந்தும் பொன்மொழியும் "திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும்" என்ற தேவாரப் பொன்னடியும் ஒவ்வொரு ஊரிலும் கோவில்கள் இருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குகின்றன.

இறைவனின் மாறாக் கருணையின் வடிவமாகத் தோற்றுவிக்கப்பட்ட உக்கிர அருள் வடிவமே வீரபத்திரப் பெருமான். தக்கன் யாகத்தை அழித்து அதனைச் சிதைத்து அடிமை கொள்ளுமாறு திருவுளங்கொண்டு சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணின்றும் வீரபத்திர மூர்த்தியை தோற்றுவித்தருளினார். அருள் பொழியும் மூர்த்தியாம் வீரபத்திரப் பெருமான் இலங்கா தீபத்தின் வடபால் ஈழப்பெரு நாடாம் புகழ்பெற்ற அருட்தலம் நல்லூரின் வடபுறத்தே, அருட்கோவில்களும் சுனைகளும் அருட்செல்வர்களும் பொருட்செல்வர்களும் நிறைந்து வசழுங் கல்வியங்காட்டில் கறுப்பையா வளவில் கோவில் கொண்ட எம்பெருமான் ஆலயம் காலத்தால் மிகப் பழமையானதும் கிராம மக்களினால் வழிபாடு செல்யப்பெற்று பெறுபேறு பெற்றதுமான ஸ்ரீ வீரபத்திரப் பெருமான் தானாக வளர்ந்த ஒரு கல்லில் பூவரசமர நிழலில் தோன்றினாரென்றும்' ஒருமுறை எம் பெருமானுக்கு அபிஷேகம் செய்வதற்கு பலாப் பழம் கிடைக்காமையால் பூசகர் கவலையோடு நித்திரை செய்தாரென்றும் அன்றிரவு எம்பெருமான் பூசகருக்கு கனவிற்தோன்றி கவலைப்படவேண்டாம். கோவிலடி பலாமரத்தில் பழம் இருக்கிறது என்று கூறினாராம். பூசகர் சந்தோசத்துடன் நித்திரை விட்டெழுந்து தமது கடமைகளை முடித்துக்கொண்டு கோவிலடிக்கு வந்து பலாமரத்தை அண்ணார்ந்து நாலா பக்கமும் பார்த்தார். பழமே காணப்படவில்லை. தாம் கண்டது கனவு தானே என்று தம்மனதை திருப்திசெய்து கொண்டு பலா அடிக்கு வந்தார். பலாப்பழத்தின் நறுமணம் நாசியை ஒருகணம் நம்பவைத்தது. இம்மணம் எங்கிருந்து வருகிறது என்று உற்று நோக்கினார். பலாமரத்தின் அடிமரத்தடியில் மண்ணில் ஒரு வெடிப்பு காணப்பட்டது. அதனூடாகவே பலாப்பழம் வாசனைவீசுவதை உணர்ந்து கொண்டார். நிலத்தை சிறிது தோண்டினார். வேரிலே ஒரு பலாக்கனி நறுமணம் வீசிக்காணப்பட்டது. ஐயர் ஆனந்தக்கூத்தாடினார். எம்பெருமான் கருணையை வியந்து போற்றினார். அப்பழத்தை எடுத்துவந்து வீரபத்திர சுவாமிக்கு அபிஷேகம் செய்தாரென்றும் கர்ணபரம்பரையாக கதை சொல்வதையும் நாம் கேட்டுள்ளோம்.

இத்துணை அருள் பொழியும் மூர்த்தியின் ஆலய உரிமையாளர்களாக மாதர் வீரகத்தியர் வழிவந்த முருகேசு, வேலுப்பிள்ளை, கந்தர் ஆகியோரின் வழித் தோன்றல்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்தனர். இவர்கள் அன்பினால் சிறு ஆலயம் அமைத்து அக்கல்லை வைத்து பூசை வழிபாடு செய்து வந்தனர், ஆலயத்தின் பராமரிப்புக்காக இவர்கள் ஆலயத்தின் பெயரில் பல நிலங்களைப் பூதானமாக எழுதிவைத்துள்ளனர். பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயம் 1966-ம் ஆண்டிற்கு முற்பட்ட காலத்தில் கவனிப்பாரற்ற நிலையில் ஆதரவற்ற ஆலயமாக ஆடுமாடுகள் உறங்கும் இடமாக இருந்ததாகவும் தெரியவருகின்றது, கல்வீழுந்து செல் எடுத்த புற்றும் புதருமாக நிறைந்து பாழடைந்த கோவிலாய் இருப்பதைக் கண்ட முன்னைநாள் உரிமையாளர்களின் வழிவழி வந்த இளந்தலைமுறையினரான கந்தையா - சண்முகலிங்கம் அவர்களின் முயற்சியால் பொதுமக்களின் ஆதரவுடன் ஆலயம் சிறிது மெருகூட்டப்பட்டு 1966 ஆம் ஆண்டு பராபவ வருடம் சித்திரை மாத திரயோதசித் திதியில் நயினை கைலாயநாதக்குருக்களின் நல்லாசியுடன் குடமுழுக்கு செய்து வைக்கப்பெற்றது. இந்த நன்நாளே ஆலய வளர்ச்சிக்கு வித்திட்ட பொன்னாளாகும்.

பின்னர் 1975ம் ஆண்டு சித்திரை மாதம் நடைபெற்ற பொதுமக்கள் கூட்டத்தில் ஒரு பரிபாலனசபை தெரிவு செய்யப்பட்டு பரிபால சபையிடமே பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. (திரு. கா. முத்தையா ஆசிரியரைத் தலைவராகவும் திரு. சி. கந்தையா ஆசிரியரை செயலாளராகவும், திரு. க. முத்துலிங்கம் ச. நீ. அவர்களை பொருளாளராகவும் உடைய பதினொருபேர் கொண்ட) நிர்வாகசபையினரே பொறுப்பேற்று பல திருத்த வேலைகளை செய்ய ஆரம்பித்தனர். இந்த ஆலயத்திற்கு செல்வதற்கு சிறந்த ஒரு பாதை கூட இருந்ததில்லை. வாகனத்தில் செல்வதானால் பருத்தித்துறை வீதிவழியாக வரவேண்டியிருந்தது. புதிய பரிபால சபைக் காலத்தில் இக்குறை நீக்கப்பட விரும்பி டிஸ்பன்சறிவீதி ஆலயத்தின் வடக்கு வீதியால் பருத்தித்துறை வீதியுடன் இணைக்கப்பட்டு வீரபத்திரர் வீதி எனவும் பெயரிடப்பட்டு வழங்கி வருகிறது. இவ்வீதி இணைப்பு இவ்வாலய அடியார்களுக்கும் ஊர்மக்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாகும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

நிர்வாகப் பொறுப்பை பரிபாலனசபை பொறுப்பேற்ற சிறிது காலத்தில் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று பத்திரகாளி ஆறுமுகசுவாமி ஆலயங்களும் மகாமண்டபம் யாகமண்டபம் என்பன அமைக்கப்பெற்று 1976-ம் ஆண்டு வைகாசிமாதம் 5 ஆம் நாள் புதன்கிழமை குடமுழுக்கு செய்யவும், பத்திரகாளி பிரதிஷ்டை செய்யவும் அருள்பாலித்துள்ளது, அதன்பின் நித்திய நைமித்திய பூசைகளும் விசேடதின விழாக்களும் அலங்கார உற்சவங்களும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வந்தன. இவ்வாலயத்தின் விநாயகர் ஆலயம் 1977 தை 31 ஆம் நாள் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14-ம் நாள் குடமுழுக்கு செய்து வைக்கப் பெற்றுள்ளது.

கர்ப்பக்கிரக மண்டபம் மிகப் பழமை வாய்ந்து இருந்தபடியால் திரும்பவும் வெடிப்புக் காணப்பட்டுள்ள இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்த அடியார்கள், அன்பர்களின் விருப்பின்பேரில் 1988ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 29 ஆம் நாள் பாலஸ்தாபனம் செய்யப்பெற்று இப்பொழுது புதுப்பொலிவுடன் கம்பீரமாக விளங்கும் இவ்வாலயம் பலவகைச்சோதனைகளும் வேதனைகளும் நிறைந்த காலகட்டத்தில் எம்மூர் அடியவர்களினாலும் வெளிநாடுகளில் வாழும் சைவ இளைஞர்களினாலும் உவந்தளிக்கப்பட்ட பல லட்ச ரூபா செலவில் கைதேர்ந்த ஸ்தபதிகளினாலும் சிற்பக் கலைஞர்களினாலும். ஓவிய விற்பன்னர்களினாலும் அழகுற அமைக்கப்பெற்ற மணி மண்டபங்களும், விநாயகர், கௌரி அம்பாள், சந்தான கோபாலர், சுப்பிரமணியர், சனீஸ்வரன், சண்டேஸ்வரர், துர்க்கா தேவி, லிங்கோற்பவர், தட்சிணாமூர்த்தி, சூரியன், சந்திரன், பைரவர் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் பொலிவுற்று விளங்கும் இவ்வாலயம் 1990 ஆம் ஆண்டு ஆனித் திங்கள் 3 ஆம் நாள் நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களினால் குடமுழுக்குச் செய்ய அருள் பாலித்துள்ளது.

எல்லா உற்சவங்களும் சிறப்புற நடைபெற்று வந்த பொழுதிலும் மகோற்சவம் நடைபெறாதிருப்பது கவலைக்குரியதாக இருந்தது. மகோற்சவம் இடம்பெறத்தக்க வகையில் மகாகும்பாபிஷேகத்தின் போதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடித்தம்பமும் பிரதிஷ்டை செய்து வைக்கப்பெற்று சித்திரா பூரணைத் தினத்தன்று தீர்த்தோற்சவம் இடம்பெறத்தக்கவகையில் 1991 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் ஆரம்பக் கொடியேற்ற விழாவுடன் 10 நாள் மகோற்சவம் ஆரம்பமாகி நடைபெறவும் பரிபாலனசபை ஒழுங்கு செய்துள்ளது. கடந்த மூன்றாண்டுகள் எம்பெருமான் கட்டுத்தேரில் வீதிஉலா வந்து அருள் பாலித்துள்ளார். நான்காவது மகோற்சவ காலத்தில் எம்பெருமான் புதிய சித்திரத்தேரில் எழுந்தருளச்செய்யவேண்டுமென்ற எம்மக்களது நீங்காத நினைவுகளை நிறைவேற்ற 1993 ஆம் ஆண்டு தைத்திங்கள் 8ஆம் நாள் பொதுமக்கள் கூட்டத்தில் தேர்த்திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு இவ்வாலயத்தில் நடைபெற்ற பெரிய திருப்பணி தேர்த்திருப்பணியாகும். அடியார்களின் அரும்பெரும் நிதியினாலும் வெளிநாட்டிலுள்ள எம்மவரின் பெருநிதியினாலும் ஒரே வருடத்தில் பூர்த்தியானதும் அவனருளாலே என்பது வெளிப்படை. இப்பொழுது நான்காவது மகோற்சவம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இம் மகோற்சவ காலத்தில் சித்திரத்தேர் ஓட இருப்பதை முன்னிட்டு மக்களிடையே பெருமகிழ்ச்சி நிலவுவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். வீரபத்திர சுவாமி பத்திரகாளி சமேதராய் புதிய சித்திரத்தேரில் எழுந்தருளவுள்ள இந்நாள் இவ்வாலய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய திருநாளாகும்.

வணக்கம்

பரிபாலனசபை
ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

# மங்களநாயகி சமேதருக்கோர் மங்கள தீர்த்தம்

நைமித்திய உற்சவங்களில் சிறந்து விளங்குவது மஹோற்சவமாகும். நித்திய கிரியைகளின் போது ஏற்படும் குற்றம் குறைகளை நீக்குவதற்காக மஹோற்சவ விழா எடுக்கப்படுகிறது. சிறப்புடைய மஹோற்சவ விழாக்களில் சிறந்ததான தீர்த்தோற்சவ விழா இறைவன் ஆன்மாக்களிடத்தில் அருளலைக் குறிப்பதாகும். தீர்த்தோற்சவ விழாவில் இறைவனை திருமுழுக்காட்டி நாமும் தீர்த்தமாடுகின்றேம்.

எமது ஆலயத்தில் எம்பெருமான் இதுவரை திருமஞ்சனக் கிணற்றிலே நீராடி வந்து அருள்பாலித்துள்ளார். புதிய சித்திரத்தேரில் எம்பெருமான் வீதி உலா வந்த பின்னர் புதிய கேணியில் நீராடி அடியார்களுக்கு அருள் புரிய வேண்டி அழகிய கேணியை வெட்டி உதவ முன்வந்த அன்பரையும் அவரது குடும்பத்தையும் நாம் பாராட்டுகின்றோம். கல்வியங்காடு இராசவீதியைச் சேர்ந்தவரும் வள்ளன்மை கொண்டவரும் தீர்த்தோற்சவ உபயகாரருமான திரு. கத்தையா நடராசா அவர்கள் பெரும் பொருட் செலவில் நான்கு திசைகளும் படிகளை உடையதும் அழகியதுமான தீர்த்தக் கேணி ஒன்றை உபயமாக உருவாக்கிக் கொடுத்துள்ளார். 1993 ஆம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட கேணியில், நான்காவது மஹோற்சவ தீர்த்த திருவிழாவன்று மங்களநாயகி சமேதராய் மங்கள தீர்த்தமாடுவதைப்பார்த்த கண்கள் பாக்கியம் பெற்றவையே. காக்கும் தெய்வமாகக் கருணை மழை பொழியும் எம் பெருமான் 94 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 25 ஆம் நாள் (25-4-94) புதிய கேணியில் தீர்த்தமாடும் திருநாளை நாமும் எமது வருங்கால சந்ததியினரும் நினைவு கூருவோமாக. தீர்த்தோற்சவ உபயகாரருக்கு இறைவன் நீடித்த ஆயுளும் நிறைந்த உள்ளமும் நல்க வேண்டி நல்லாசி நவில்கின்றோம்.

பரிபாலனசபை
ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேர்த் திருப்பணி

" தேரடியிற் சென்று தரிசிந்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை – நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்.

சிவயோக சுவாமிகள் கல்வியும் செல்வமும் கவினுற விளங்கும் கல்வியம் பதியில் வாழையடி வாழையென வந்த இன்றைய தலைமுறையினரால் அருளே உருவான சுவாமி எனப் போற்றப்படும் ஒப்பிலாமூர்த்தியாம் ஸ்ரீ வீரபத்திரப் பெருமானுக்கு கவினும் கருணையும் பொலிவுற விளங்கும் புதிய சித்திரத்தேர் நிறைவு பெற்றதையிட்டு வீரபத்திரர் அடியார்கள் பலரும பெருமகிழ்ச்சியடைவார்கள் என்பதையிட்டு நாம் மகிழ்கின்றோம்.

1993 ஆம் ஆண்டு தைத் திங்கள் எட்டாம் நாள் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் எம்பெருமானுக்கு சித்திரத்தேர் செய்யவேண்டும் என்று பெருமகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்கள் வேண்டுதல் விடுத்தனர். இன்றைய நன்நாளில் திருப்பணிச்சபை ஒன்றும் தெரிவாகியுள்ளது. இத் திருப்பணிச்சபை 1993 ஆம் ஆண்டு தை மாதம் 14 ஆம் நாள் பொங்கல் திருநாளன்று முதல் முதல் கூடி தங்கள் வேலைத்திட்டங்களை வகுத்துள்ளனர்.

எமது திட்டத்தின் முதற்படியாக தேர் செய்வதற்குரிய கேள்வி விண்ணப்பம் கோரப்பட்டது. இதன்படி அழகும் அருளும் விளங்கும் தேர் நிர்மாணிக்கும் உரிமை திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய முதலவர் ஸ்தபதி ஆறுமுகம் சீவரத்தினம் ஐயாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பின்னர் 19.04.93 அன்று நிதி சேகரிக்கும் எமது திட்டம் ஆரம்பமானது. அன்றைய தினமே அன்பர்கள் பெருநிதி வழங்கி எம்மை எம்பணி தொடர ஊக்குவித்தனர். வேதனைகளும் சோதனைகளும் நிறைந்த இந்தக் காலகட்டத்தை நாம் ஒரு முறை யோசிக்காமல் இருக்க முடியவில்லை. இந் நிலையில் ஆண்டவனே இத் திருப்பணிக்கு அருள்பாலித்துள்ளார். அடுத்து எம் பணி தொடர 05.05.93 புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு உடன்படிக்கை ஆலய முன் மண்டபத்தில் கைச்சாத்திடப் பெற்றது.

பூசாந்திர வடிவமானதும் முழுமையானதும் சிறந்துமான சித்திரத்தேர் ஆரம்பவேலை 1993 ஆம் ஆண்டு ஆனி மாதம் 3 ஆம் நாள் விசாகத் திருநாளன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பிக்க அருள்பாலித்துள்ளது. எம்பணி தொடர 03.07.93 ல் அடித்தள நாட்டுவிழாவும் 29.10.93 வெள்ளிக்கிழமை பகல் 12.45 மணிக்கு பக்தர்கள் புடைசூழ பவளக்கால் நாட்டுவிழா பக்திபரவசத்துடன் நடைபெறும் பெருவிழாவாக எடுக்கப்பட்டு மங்கள வாத்தியம் முழங்க காண்டாமணி ஒலிக்க அடியார்களின் அரோகரா ஓசையுடன் பவளக்கால் அடித்தளத்தில் நாட்டப்பட்ட காட்சியை நாம் ஒருமுறை நினைவுகூருவோம்.

திருத்தேரின் தத்துவத்துக்கு ஏற்றவண்ணம் அமைப்பில் பல அழகியல் முறைகளைக் கையாண்டிருக்கிறார் ஸ்தபதியார் சீவரத்தினம் ஐயா அவர்கள். ஸ்தபதியாரின் கற்பனையில் உருவான கருவூலங்களை கையினால் வடிக்கும் கலைஞர்களின் திறமைதான் என்னே ...... காணக்கண் ஆயிரம் வேண்டும் என்றாலும் சரியானதே. அக்கிரமங்களை அடக்கும் விக்கிரக வடிவங்கள வீரபத்திரரே வீணரை அடக்க வீறுகொண்டு வந்த செயலை நம் கண் முன்னே சித்தரிக்கின்றது. மரத்தினாற் செய்த எழில் கொஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் சிற்ப சிருங்காரச் சித்திரிப்புகளை செதுக்கி அளிக்கும் அவரது சிற்பக்கலைஞர்களையும் சிறிது நினைவிற் கொள்ளலாமென அவாவுகின்றேன்.

இத்தேரின் உணர்ச்சிமிக்க சிற்பங்களைப் படைத்த கலைஞர்களின் தெய்வீகக் கரங்கள் அவற்றை வெறும் மரவாகனமாகப் படைக்காமல் கலைக் கோயிலாகவே வடித்துள்ளன. ஸ்தபதியாரின் மனக்கண்ணில் உதயமான அத்தனை வடிவங்களையும் அற்புதமாக அமைக்கும் கலைஞர்களை வாயார வாழ்த்தி எம்மக்கள் சார்பில் அன்பு கூறுகின்றேன்.

தேர்த் திருப்பணிச்சபை
ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்.

# வருக புத்தேரே !

வருக புத்தேரே வருக புத்தேரே
வடம் பிடித்தவர் வண்மை பெருகிட
அருள் மழைபொழிந்து அன்பு சொரிந்திட
வருக புத்தேரே வருக புத்தேரே
அருள்வளம் பெருகிட அவனி பொலிந்திட
பெருவளம் சொரிந்து பேதமை யகன்றிட
வருக பத்தேரே வருக புத்தேரே
வீரம் செறிந்திட வீணரை வீழ்த்திட
காவியம் படைத்திட கருணை சொரிந்திட
வருக புத்தேரே வருக புத்தேரே
நெஞ்சு நிறைந்த நீன்னடியார் போற்றிட
ஐந்து குதிரைகள் விஞ்சி இழுத்திட
வருக புத்தேரே வருக புத்தேரே
ஞானம் பெருகிட ஞாலம் செழித்திட
தானம் வழங்கிட தரணி புகழ்ந்திட
வருக புத்தேரே வருக புத்தேரே
தேரோடும் வீதியிலே திருவுலா வந்துவிட
வேரோடும் மும்மலங்கள் சம்காரம் செய்துவிட
வருக புத்தேரே வருக புத்தேரே.

சி. கந்தையா ஆசிரியர்
செயலாளர்

தேர் திருப்பணிச் சபை,
வீரபத்திரர் தேவஸ்தானம்,
கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பெரும் சிற்பக்கலாமணி சீவரத்தினம்

கலைஞர் ஒரு கருத்துலகச் சிற்பி அவனது படைப்புக்கள் கலையின் ஒவ்வொரு அங்கமும் கலைக்கு உயிரூட்டி கருத்துக்குத் தெளிவூட்டி தன்னிகரற்ற தனித்தன்மையைக் கொண்டு மனதிற் பதிந்ததை; மரத்தில், காத்தால் அழகு சிலையாக ஆக்கித் தந்த சிற்ப சிகாமணி சீவரத்தினம் அவர்களை நாம் இங்கே நிழற்படுத்துகிறோம்.

ஈழவள நாட்டின் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவமும் கலையும் தழைத்தோங்கும் கிராமம். இங்கே கலைசிறந்த சிற்பாசாரியார், விநாயகர் ஆறுமுகம் அவர்களின் மகனாக 1938 ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 16ஆம் நாள் இம்மண்ணிற் தோன்றினார்.

ஆரம்பக் கல்வியை திருநெல்வேலி சைவ வித்தியாசாலையிலும் உயர்கல்வியை யாழ். பரமேஸ்வராக் கல்லூரியிலும் கற்றுள்ளார். தந்தையாரின் சிற்பாலயத்திலே தந்தையாரையே குருவாகக் கொண்டு சிற்பகலையை கற்றுக்கொண்டார். எல்லையில்லாக் கலையை இயலுமட்டும் கற்கவேண்டுமென்ற ஆசை அவர் மனதில் எண்ணம் கொண்டதனால் அயல்நாடான பாரதநாட்டிற்குச் சென்று அங்கே மாமல்லபுரம் சிற்பக்கல்லூரியிலும் கும்பகோணம் ஜெகந்நாத ஸ்தபதியிடமும் காரைக்குடி ஸ்ரீநிவாஸ ஸ்தபதியாரிடமும் சிற்பக்கலையின் நுண்ணிய நுட்பத்திறமையை கற்றுத்தேறினார்.

அன்பின் திருவுருவும் தூய உள்ளமும் சிரித்த முகமும் பூரணை நிலாப் போன்ற நெற்றித் திலகமும் அதனை அலங்கரிக்கும் குங்குமப் பொட்டும் கனிவான பேச்சும் இனிமையான நடையும், சிறந்த முகாமைத்துவ இலட்சணமும் கொண்ட சீவரத்தினம் ஐயா அவர்கள் தன் ஊக்கத்தினாலும் அயராத உழைப்பினாலும் உயர்ந்து ஈழநாட்டிலும், சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் வரலாற்றுப்புகழ் பெற்ற ஆலயங்களிலும் நூற்றுக்கு மேற்பட்ட சித்திரத் தேர்களை உருவமைத்துள்ளார்.

புதிய புதிய சித்திர அமைப்புக்களையும் பல சரித்திர புராண நிகழ்வுகளையும்; சித்திரமாக, சிலையாக வடிவமைத்த தேர்கள் இன்றும் புகழ்பாடிய வண்ணம் வரலாற்றுப் புகழ்பெற்ற பல ஆலயங்களில் பவனிவருவதைக் காண்கிறோம். சிற்பச் சக்கரவர்த்தி, சிற்பராஜ சிம்மன், சிற்பரத வித்தகர், சிற்ப கேசரி, சிற்பகலாமணி போன்ற பல பட்டங்கள் வழங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளார்.

21-4-94 வியாழன் கல்வியம்பதி ஸ்ரீ வீரபத்திர சுவாமி வீதியிலே வலம்வரும் இத்தேர் இவரின் 106 வது படைப்பாகும் இந்த எழில்மிகு தேரை உருவமைத்த சிற்பசிகாமணி அவர்களும் தேரினை அழகுற அமைத்த கலைஞர்கள் அனைவரும் பூரண நிறைவு கொள்கின்ற வேளையில் எமது கிராம மக்களும் அயற்கிராம அடியவர்களும் தேரிலே எம்பெருமானைப் பார்த்து ஆனந்தக்கண்ணீர் மல்கி மெய்சிலிர்த்து அருள்வேண்டி நிற்கிறார்கள். இறைவனும் எல்லோருக்கும் அருட்காட்சி கொடுத்து நிற்கிறார். இந்த நன்னாளை நாம் நினைவுகூர்ந்து இதில் இணைந்து செயலில் பங்கேற்ற அனைவருக்கும் திருப்பணிச் சபையாரின் நல்வாழ்த்துக்கள்.

தேர்த் திருப்பணிச் சபை
ஸ்ரீ வீரபத்திரர் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை மழை பொழியும் கல்வியம்பதி வீரபத்திரர் சித்திரத் தேரேறி பவனிவரும் திருநாள் 24-04-1994

மாமகளும் நாமகளும் மகிழ்ந்து வீற்றிருக்கும் வட தமிழீழத்தின் பாங்கர் யாழ்நகர் என்றோர் அணிநகர் உளது. அந்நகரின் வடபால் சிவபூமி எனப் போற்றப்படும் திருநகரம் நல்லை நகரின் வட எல்லையில் கல்வியம்பதியென்றோர் கவினுறு கிராமம். இக்கிராம மக்களின் காவற்தெய்வமாக விளங்குபவர் வீரபத்திரப் பெருமான். எம் பெருமான் ஆலயம் காலத்தால் முற்பட்டதென்று எம் முதாதையர்கள் கர்ண பரம்பரைக் கதையாகக் கூறவும் கேட்டுள்ளோம். அவருடைய அற்புதங்களையும் அயலவர்கள் ஆண்டாண்டாக கூறிக்கொண்டே வருகின்றார்கள். அப்பனை அண்டி அருள் பெற்றவர்கள் ஆதனங்கள் பலவற்றை பூதானமாக எழுதியும் வைத்துள்ளனர்.

எம் பெருமான் சந்நிதானம் இடைப்பட்ட காலத்தில் பூசை வழிபாடு குன்றி இடிந்த மண்டபங்களும் சிதைந்த கூரைகளும் உடையனவாய் இருந்ததாகவும் அறிந்துள்ளோம். தெளிந்த உள்ளங்களில் சோதிக்குள் சோதியாய் விளங்கும் பெருமானுக்கு இறை பணியாம் தூய நெறியில் வாழ்ந்து வீரபத்திரர் திருவடிகளையே செல்வமாகக் கருதும் அடியார்கள் பிற்காலத்தில் ஆலயத்தை அரும்பெரும் நிதியில் அழகுறவமைத்து மாண்புறு மணிமண்டபங்களும் கலைத்திறன் மிக்க கவினுறு கர்ப்பக்கிரக மண்டபங்களும் ஆக்கி அழகே உருவாக அமைந்துள்ளனர். விநாயகர், முருகன், முகுந்தன், கௌரி முதலாய பரிவார மூர்த்திகளும் புடைசூழ விளங்கும் பெருமான் இருபத்தைந்து ஆண்டுகளில் மூன்று குடமுழுக்குகளைக் கண்டுள்ளதும் பெருமைக்குரியதாகும்.

காவற் தெய்வமாக அமைந்து கருணை மழை பொழியும் பெருமான் கல்வியம்பதிவாழ் மக்களுக்கும் அயலவர்க்கும் சகல செல்வங்களையும் கொடுத்து சீரும்சிறப்புமாக வாழ அருள்பாலித்து வருகின்றார். அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரப் பெருமானதும் பத்திரகாளி அம்மையினதும் பாதார விந்தங்களே ஆதாரமாகக்கொண்டு நாள்தோறும் ஆலயம் சென்று அலங்காரத்திருக்கோலத்தைக் கண்டு களித்து வருபவர்கள் எம்மக்கள். ஆலயத்தில் நித்திய நைமித்திய பூசை வழிபாடுகள் சிறப்புற நடந்ததாயினும் 19-4-1991 இல் மகோற்சவ விழாவும் ஆரம்பமாகி நடைபெறவும் எம்பெருமான் அருள்பாலித்துள்ளார்.

இறைவனின் சம்காரமாகிய ரதோற்சவம் என்னும் தேர்த்திருவிழாவை சிறப்புற நடாத்த விரும்பிய அடியார்கள் தங்கள் சகல செல்வங்களையும் வாரிவழங்கி சித்திரத்தேர் ஆக்கவும் ஆரம்பித்தனர். கலைஞர்களின் திறமையால் கலைக்கோயிலாக கலைப்பெட்டகமாக அமைக்கப்பட்ட ரதம் எம்கண் முன் கம்பீரமாக விளங்குகின்றது. விக்கிரக வரிகளில் வீரபத்திரர் கதைகளைச் சித்திரிக்கும் அத்தனை வடிவங்களும். எட்டுத் திக்கும் ஏறுபோல் வீறிடும் யாழிகளும் மகர மீன் சின்னமும், மாண்புறு அன்ன அலங்காரமும், வாகுமாலைகள் வரிசையாய்த் தொங்கவும் கூட்டில் குலுங்கும் வெற்றிக்கொடிகள் அசைந்தாட பஞ்ச துரகங்கள் பாய்ந்துதேர் இழுக்க நெஞ்சம் நெகிழ, எழில் கொஞ்சும் சிம்மாசனத்தில் விடிந்து எழும் ஞாயிறு போல் ஞாயிறு காலை வீதீ உலாவர ஆயத்தமாகிறார்.

பஞ்சதீபம் ஒளிவீச! மங்கள வாத்தியம் முழங்க, விறல் வீரன் வீரபத்திரர் தேரேறி வருகின்றார் என்று அந்தணர் கட்டியம் கூற பக்தர்கள் அரோகரா கோஷத்துடன் வடம் பற்றி இழுக்க திருத்தேரை அலங்கரிக்கும் மணிகள் கலீர் கலீர் நாதம் எழுப்ப நான்கு சில்லும் நகர்ந்து உருண்டோடிட தேரோடும் வீதியிலே ஊரோடு உறவாடி கருணைமழை பொழிய வருகின்றார் காண வாரீர்.

சி. கந்தையா ஆசிரியர்
செயலாளர்

தேர்த் திருப்பணிச் சபை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வீரபத்திரமூர்த்தி வழிபாடு

எம். வேதநாதன், எம். ஏ.
முதுநிலை விரிவுரையாளர்
இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*அந்தி வான்பெரு மேனியன் கறைமிட றணிந்த*
*வெந்தை தன்வடி வாயவ னுதல்விழி யிடையே*
*வந்து தோன்றியே முன்னுற நின்றன னம்மாதோ*
*முந்து வீரபத்திரரெனுந் திறலுடை முதல்வன்.*

(கந்தபுராணம், வீரபத். (4)

சிவபெருமான் தான் நினைத்ததொரு திருமேனியைக் கொண்டருளுவான் என்பதை ''நிறுத்திடுவன் நினைந்தமேனி நின்மலனருளினாலே'' என்ற சிவஞான சித்தியாரின் சுபக்கப்பாடல் (65) தெளிவாக்குகின்றது. யாதொரு தெய்வத்தை வழிபட்டாலும் அத்தெய்வமாக எழுந்தருளி வந்தருள் புரிபவர் தேவியை ஒருபாகமாக உடைய சிவபெருமானே என்பதை ''யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்'' என்ற சித்தியார் குறிப்பு (பாடல் 115) புலப்படுத்துகின்றது. இந்த அடிப்படையிலேயே சிவபெருமானின் திருக்கோலங்கள் அறுபத்துநான்கு என்று சிவாகமங்கள் குறிப்பிடுகின்றன. இத்திருக்கோலங்களுள் சிவனின் வீரச்செயலை வெளிப்படுத்தும் ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரமூர்த்தியும் ஒன்றாகும். சிவாகமங்களில் சிவனுக்கு அறுபத்திநான்கு வடிவங்கள் கூறப்பட்டிருப்பினும் அவரை அருவுருவத்திருமேனியாகிய இலிங்கவடிவில் கருவறைக்குள் நிறுவி வழிபடுவதனையே இந்தியா, இலங்கை முதலிய இடங்களில் பொதுவாகக் காணக்கூடியதாகவுள்ளது. சிவலிங்கத்தை மட்டுமன்றி வீரபத்திரர், பைரவர் போன்ற உருவத்திருமேனிகளையும் கருவறைக்குள் நிறுவி வழிபடுவது சிவவழிபாட்டில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும். இவ்வழக்கத்தினை இந்தியாவிலும், இலங்கையிலும் காணமுடிகின்றது.

## வீரபத்ர என்ற சொல்

வீரபத்திரமூர்த்தியை 'வீரபத்ர' என்று வழங்குவர் 'வீரபத்திர' என்ற சொல்லிலுள்ள 'வீர' என்பது வீரத்தையும், 'பத்ர' என்பது நன்மையினையும் குறித்து நிற்பதாகக் கொண்டு வீரத்தினையும் நன்மையினையும் நல்கும் தெய்வமாக வீரபத்ரரை மக்கள் வழிபட்டு வருகின்றனர். பாதாரவிந்தங்களில் தண்டை வீரகண்டையுடன் வீரபத்திரர் தோன்றியமையால் அவருக்கு வீரபத்திரர் என்ற பெயர் உண்டாயிற்றென பிரபஞ்ச உற்பத்தி என்ற நூல் குறிப்பிடுகின்றது.

## மறு நாமங்கள்

தெய்வீகச் செயல்களை அடிப்படையாகக் கொண்டு வீரபத்திரருக்குப் பலநாமங்கள் கூறப்பட்டுள்ளன. உக்கிரன், அழற்கண்ணவந்தோன், உமைமகன், சிம்புளானோன், முக்கணன், சடையோன், யானைமுகவனுக்கிளையோன், வில்லி, செக்கர்வானிறத்தன், குரோதன், சிறுவிதி மகஞ்சிதைத்தோன், பத்திரைக்குக் கேள்வன் என்ற திருநாமங்கள் வீரபத்திரருக்குரியவை என்பதை சூடாமணிநிகண்டு தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரபத்திர வடிவங்கள்

வீரபத்திரருக்குரிய வடிவங்கள் பற்றி சிவாகமங்களும், சிற்பநூல்களும் குறிப்பிடுகின்றன. நெருப்பு வீசுஞ்சடையும், மூன்று கண்களும், வக்கிரதந்தமும், மணிகலந்த கபால மாலையும், தேள் மாலையும், பாம்பாலான பூணூலும், கட்கம், கேடகம், பாணம் வில்லு ஆகியவற்றைத் தாங்கிய நாற்கரங்களும், கணைக்காலில் கிண்கிணியும், காலில் மிதியடியும், முழந்தாள்வரை காற்சட்டையும் கொண்டு விளங்கும் வீரபத்திரவடிவத்தை உத்தரகாரணாகமம் (61 : 1 – 5) குறிப்பிடுகின்றது.

கட்கம், கேடகம், பிண்டி, கபாலம் என்ற நான்கினையும் ஏந்திநிற்கும் நிலையிலும் வீரபத்திரரின் வடிவம் அமைக்கப்படும். நான்கு திருக்கரங்களும், மூன்று கண்களும் கொண்டு விளங்கும் இவ்வடிவத்தின் தலையைச் சுற்றி அக்கினிச் சுவாலை ஒளிபரப்பிப் பரந்து கிடக்கும். பயங்கரத்தை அதிகரிக்கும் வகையில் தலைமயிர் அமைந்திருக்கும். பளபளக்கும் பற்களும் பயங்கரத்தை ஏற்படுத்தும். அவர் அணிந்துள்ள மணிகள், மண்டை ஓடுகள், தண்டை நிகர்க்கும் அணிகலன்கள். பாம்பினாலமைந்த பூணூல் சதங்கை முதலியனவும் மேலும் பயமூட்டுவனவாகவே காட்சிதரும். தொடைவரை அணிந்திருக்கும் இம் மூர்த்தியின் ஆடையை ஊருக்கஞ்சுகம் என்று அழைப்பர்,

ஸ்ரீதத்துவநிதி என்ற சிற்பநூல் நான்கு கைகளும், மூன்று கண்களும், பயங்கரமான கோரப்பற்களும் உடைய வீரபத்திர மூர்த்தியின் உருவத்தைக் குறிப்பிடுகின்றது. இந் நிலையில் இம்மூர்த்தியின் இடது கைகளில் வில்லும், கதையும் விளங்கும். வலது கைகளில் கத்தியும் பாணமும் இருக்கும். கபால மாலை கழுத்தை அலங்கரிக்கும்.

ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம் என்ற நூல் நின்ற திருக்கோலத்தில் விளங்கும் நிருத்த ரூபர், தக்ஷண ரூபர், ருத்திரபாகர், அகோர வீரபத்திரர், அஷ்டகாசரூபர், மஹாவீரிய ரூபர், தெட்சயெக்கியரூபர், அகோர அஸ்திரரூபர் என்ற எட்டு வகையான வீரபத்திர வடிவங்களின் அங்க அமைவு பற்றி பின்வரும் விபரங்களைத் தருகின்றது. நான்கு கரங்களுடன் விளங்கும் நிருத்தரூபரின் வலது கைகளில் கத்தியும், பாணமும், இடது கைகளில் கேடயமும், வில்லும் காணப்படும். இத்தகைய திருக்கோல அமைப்பிலேயே கல்வியங்காட்டிலுள்ள ஸ்ரீவீரபத்திரர் ஆலய மூலமூர்த்தியும், எழுந்தருளி மூர்த்தியும் விளங்குகின்றனர். ஆறுகரங்களுடன் விளங்கும் தக்ஷணரூபரின் வலது கைகளில் மழுவும், கத்தியும், பாணமும், இடது கைகளில் மானும், கேடயமும் வில்லும் காணப்படும். எட்டுக் கரங்களுடன் விளங்கும் ருத்திரபாகரின் வலது கைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி என்பனவும் இடது கைகளில் கேடயம், வில்லு, மான் டமுரகம் என்பனவும் இருக்கும். பத்துக்கைகளுடன் விளங்கும் அகோர வீரபத்திரரின் வலதுகைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி என்பனவும், இடது கைகளில் கேடயம், வில்லு, மான், டமுரகம், கபாலம் என்பனவும் காணப்படும். பன்னிரெண்டு கரங்களுடன் விளங்கும் அஷ்டகாசரூபரின் வலது கைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, தோமரம் என்பனவும் இடது கைகளில் கேடயம், வில்லு, மான், டமுரகம், கபாலம், படமரம் என்பனவும் காணப்படும். பதினான்கு கரங்களுடன் விளங்கும் மஹாவீரிய ரூபரின் வலது கைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, தோமரம் முசலம் என்பனவும், இடது கைகளில் கேடயம், வில்லு, மான், டமுரகம், கபாலம், படமரம், பிண்டி, பாலம் என்பனவும் காணப்படும். பதினாறு கரங்களுடன் விளங்கும் தெட்சயெக்கிய ரூபரின் வலதுகைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, தோமரம், முசலம், தண்டு என்பனவும் இடது கைகளில் கேடயம், வில்லு, மான், டமுரகம், கபாலம், படமரம், பிண்டி, பாலம், பாசம் என்பனவும் காணப்படும். பதினெட்டுக் கரங்களோடு விளங்கும் அகோர அஸ்திரரூபரின் வலது கைகளில் கத்தி, பாணம், மழு, சூலம், மணி, தோமரம், முசலம், தெண்டு, ப்ரசு என்பனவும் இடது கைகளில் கேடயம், வில்லு, மான், டமுரகம், கபாலம், படமரம், பிண்டி பாலம், பாசம் பேதாளம் என்பனவும் காணப்படும் மதுரைத்தமிழ்ப் பேரகராதி ஆயிரம் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடனும், இரண்டாயிரம் கைகளுடனும் மூவாயிரம் கண்களுடனும் விளங்கும் வீரபத்திரரின் திருக்கோலத்தைக் குறிப்பிடுகின்றது. வீரபத்திரரின் வடிவங்கள் பற்றிய இக்குறிப்புகள் யாவும் அவரின் சிவபரத்துவ மேன்மையினைப் புலப்படுத்தி நிற்கின்றன எனலாம்.

## தெய்வீக வரலாறு...

சிவபரத்துவத்தினையும் - சிவவேள்வியின் சிறப்பினையும் - வேள்வியில் சிவனுக்கு வழங்கப்படவேண்டிய முக்கியத்துவத்தினையும் உலகிற்கு உணர்த்தி நிற்கும் உயரிய வடிவமே வீரபத்திர மூர்த்தியாகும். இம் மூர்த்தியின் தெய்வீக வரலாறுபற்றி புராணங்கள் விரிவாக விபரிக்கின்றன, சிவ புராணம், பிரம புராணம் (1.32), கூர்ம புராணம் (1.14 – 25) இலிங்கபுராணம் (1.96) வராக புராணம் (2.1) கந்தபுராணம ஆகியவற்றில் வீரபத்திரரின் தெய்வீக வரலாறுகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. கச்சியப்பரின் கந்தபுராணம் வீரபத்திரரின் தெய்வீக வரலாற்றை விரிவாக விளக்குகின்றது. சிவஞானசுவாமிகள் அருளிச் செய்த காஞ்சிப் புராணத்திலுள்ள தக்கேசப் படலத்தில் வீரபத்திரரின் தோற்றம், சிவபரத்துவம் என்பன கூறப்பட்டுள்ளன.

வீரபத்திரரைச் சிவனின் மைந்தன் என்று புராணங்கள் குறிப்பிடுகின்றன. தக்கன் சிவபெருமானுக்குக் கொடுக்க வேண்டிய அவிப்பாகத்தைக் கொடாது அவரையும், பார்வதியையும் அவமதித்த காரணத்தால், சிவன் கோபித்து தன்னுடைய நெற்றிக் கண்ணை விழிக்க சிவனது நெற்றிக் கண்ணிலிருந்து உதிர்ந்த அக்கினிப் பொறியொன்றிலிருந்து வீரபத்திரர் அவதரித்தார். வீரபத்திரரின் அவதாரத்தையும் – சிவபரத்துவத்தினையும் - சிவவேள்வியின் சிறப்பினையும் – வேள்வியில் சிவனுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தினையும், சிவபராக்கிரமத்தினையும் அபிதான சிந்தாமணி பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> 'தன்னை மாமன் என்று மதியாது செருக்கடைந்து சிவமூர்த்தியை நீக்கி தக்கன் ஒரு வேள்வி செய்யத்தொடங்கினான் அவ் வேள்வியை நாரதரால் அறிந்த தாக்ஷியணி சிவமூர்த்தியிடம் விடை பெற்று வேள்விச் சாலையை அடைந்தனள். தக்கன் தாக்ஷாயணியை அன்புடன் வரவேற்காததால்கோபித்துவேள்வியைச் சடலையாகச சபித்து, சிவமூர்த்தியை அடைந்தனள். இவளின் மன வேறுபாட்டைக் கண்ட சிவமூர்த்தி தமது திருச்சடையில் ஒன்றைப் பூமியில் மோதினார். அதினின்றும் வீரபத்திரர் அவதரித்தார். அவர் இறைவனின் கட்டளையைப் பெற்று தம்முடன் தோன்றிய பூதகணங்களுடனும் தாக்ஷயணி அனுப்பிய பத்திர காளியுடனும் சென்றுதக்கனது வேள்வியைஅழித்தார். இவ்வேள்வியில் இந்திரன் குயிலாய் பறந்தோடினான். அக்கினி, நாக்கு அறுப்புண்டான். பூஷா என்னும் சூரியன் பல்லிழந்தான். சந்திரன் வீரபத்திரரின காலால் தேய்ப்புண்டான். தக்கன் தலையறுப்புண்டனன். இது நிற்கக் காளி ஒரு புறத்து இருந்து சரஸ்வதி, இலக்குமி, இந்திராணி முதலியவர்களின் உறுப்பழித்தனள். இதனால் யக்ஞபுருஷன் பயந்து மான் உருக்கொண்டோட ஒரு பூதம் மானின் தலையைத் திருகியது. இவ்வகை வெற்றி பெற்று வீரபத்திரர் என்னும் திருநாமம் அடைந்து வீரமாகாளியுடன் அமர்ந்திருக்கும் சிவமூர்த்தியின் அம்சமே வீரபத்திர மூர்த்தியாகும் வீரபத்திரர் அசகரன், பஞ்சமேட்டிரன், அக்கினி முகன், சற்பாகரன், வியாக்கரன் வீரமார்த்தாண்டன் முதலியவர்களையும் கொன்றவன்'

மேலும் இத்தெய்வீக வரலாறு பற்றி தேவீ பராக்கிரமம் 'தக்ஷனின் தந்தையாகிய பிரமனின் பிரார்த்தனையை ஏற்ற வீரபத்திரர், தக்ஷனுடலில் ஆட்டின் சிரமொன்றினைக் கூட்டி அவனை எழுந்திருக்கச் செய்ததாகவும், அதன்பின் அவன் தன் தந்தையாகிய பிரமன் சொற்படி கயிலைப்பதியடைந்து சிவலிங்கார்ச்சனை செய்து சிவகணத் தலைவரிலொருவனாயினான்' என்று குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தெய்விக வரலாறுகள் சிவனிடம் அன்பில்லாமல் – அவரை மதியாமல்எவ்வளவு பெரிய புண்ணியம் பயக்கும் வேள்வி செய்தாலும் முடிவு துன்பமே என்பதைத் தெளிவாக்குகின்றது இறைவன் திருவடிக்கு அன்பில்லாது செய்யும் புண்ணியம் பாவமாய் முடியும் என்பதே சைவ சித்தாந்த நெறியாகும். இதனை 'பரனடிக்கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும் வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி' என்ற சிவஞான சித்தியார் செய்யுள் (சூத்திரம், 2:செய்யுள் 29) விளக்கி நிறகின்றது. இவ்வகையில் வீரபத்திரரின் தெய்விக வரலாறு சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையாகின்றது. சிவநெறி வீறுடையது என்பதையே வீரபத்திரரின் தெய்விக வரலாறுகள் புலப்படுத்துகின்றன.

## பக்தி நூல்களில் வீரபராக்கிரமம்

வீரபத்திரரின் தெய்விக வரலாற்றினையும், அவரின் வீரபராக்கிரமத்தினையும் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார் போன்ற சைவபக்தி நூல்கள் குறிப்பிடுகின்றன. சம்பந்தர் பல இடங்களில் வீரபத்திரர் தக்கன் வேள்வியை அழித்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். வீரபத்திரருடைய தண்டனைக்கு உள்ளான தேவர்களாக தக்கன், அக்கினி, சூரியன், இந்திரன், சந்திரன். பிரமன், சரஸ்வதி முதலியோரைச் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். சூரியன் பல்லுடைப்பட்ட செய்தி ஏழு இடங்களில் சம்பந்தர் வீதந்துரைக்கின்றார். தக்கனுக்கும் ஏனைய தேவர்களுக்கும் தண்டித்து அறிவு புகட்டிய பின் சிவபெருமான் அருள் செய்தார் என்று பல இடங்களில் கூறப்படுகின்றது. வேத வேள்வியில் முதல் அவிர்ப்பாகம் மகா தேவனாகிய சிவனுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதைச் சுட்டும் இக்கதை சிவனின் வீர பராக்கிரமத்தை எடுத்து விளக்குகின்றது சிவபெருமானை இகழ்ந்து ஒதுக்குபவர் அவருடைய எத்தகைய கோபத்திற்கும் ஆளாக நேரிடும் என்பதை இக்கதை காட்டுகின்றது.

வீரபத்திரரின் வீரச் செயல்களை அப்பரின் திருத்தாண்டகம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

'எச்சனினத்தலை கொண்டார் பாகன் கண்கொண்டா
ரிரவிகளி லொருவன் பல்லிறுத்துக் கொண்டார்
மெச்சன் வியாத்திரன் றலையும் வேறாக்கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார் வேள்வி காத்து
உச்சநமன் நாளறுத்தார் சந்திரனை யுதைத்தா
ருணர்விலாத் தக்கன்றன் வேள்வியெல்லாம்
அச்சமெழ வழித்துக் கொண்டருளுஞ் செய்தா
ரடியேனை யாட் கொண்ட வமலர் தாமே'

மணிவாசகர் தனது திருவாசகத்தில் வீரபத்திரர் என்ற சொல்லைக் குறிப்பிட்டு அவர் தம் வீரபராக்கிரமத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கனெச்சன் இந்துவனல்
விண்பட்ட பூதப்படை வீரபத்தி ரராற்
புண்பட்ட வா பாடிப் பூவல்லி கொய்யாமே'

(திருப்பூவல்லி. 4)

'தக்கனையும் எச்சனையும் தலையறுத்து தேவர்கணம்
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத்தது தானென்னேடீ
தொக்கன வந்தவர் தம்மைத் தொலைத் தருளி அருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலை மற்றருளினன்காண் சாழலோ'

(திருச்சாழல் 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலானது வீரபத்திரருடைய காருணியத்தையும் காட்டுவதாக அமைகிறது. இச் செய்தியை மாணிக்கவாசகர் உந்தியாரில்,

'ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற' எனக் குறித்துள்ளார்.

## தியான மந்திரம்

இந்துக் கடவுளர் ஒவ்வொருவருக்கும் தனித்தனி தியான மந்திரம் இருக்கின்றது. வழிபாட்டினைத் தொடங்கும்போது அத்தியான மந்திரத்தைக் கூறுவது மரபாகும். இந்தவகையில் வீரபத்திரரின் பிரதான தியான மந்திரமாக கீழ்க்காணும் சுலோகம் அமைகின்றது.

'மரகத மணிநீலம் கிங்கிணியுக்த பாதம்
பிரகடித முகபீசம் பானுஸோமாக்னிநேத்திரம்
ஹரிதர மணி கேடம் திரியக்ஷ மாலாக்ர ஹஸ்தம்
விதுதர மஹிபூஷம் வீரபத்ரம் நமாமி'

இதன் பொருள் பின்வருமாறு,

'மரகதநிறமானவரும், இருபாதங்களிலும் சத்தமிடும் சலங்கைகளை அணிந்திருப்பவரும், (பார்ப்பவர்களுக்கு) பயங்கரத் தோற்றமளிக்கும் முகமுடையவரும், சூரியன், சந்திரன், அக்கினி என்பவர்களைத் தனது மூன்று கண்களாக உடையவரும், சந்திரனைச் சூடியிருப்பவரும், பாம்பை அணிகலனாகக் கொண்டவரும், கேடகம், ஜபமாலை என்பவற்றைத் தரித்தவரும் ஆகிய வீரபத்திரரை வணங்குகிறேன்'

## வீரசைவத்தில் வீரபத்திரர்

வீரமுடைய சிவநெறியாக விளங்கும் வீரசைவத்தில் வீரபத்திரர் சிறப்பிடம் பெறுகின்றார். வீரபத்திரரே வீரசைவத்தை நிலைநிறுத்தியவராக வீரசைவர்கள் கருதுகிறார்கள் இதனைப் புலப்படுத்தும் விதத்தில் கன்னடம், தமிழ்நாடு ஆகிய இடங்களிலுள்ள வீரசைவக் கோவில்களிலும் வீரசைவ மடங்களிலும் வீரபத்திரரின் திருவுருவம் நிறுத்தப்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. ஈழத்தில் காங்கேசன்துறையில் கோயில் குடிகொண்டுள்ள வீரபத்திர மூர்த்தி லிங்கத்தை அணிந்தவராகக் காட்சி தருகின்றார். இக்கோயில் வீரசைவர்களே பூசை செய்து வந்தனர். இத்தகைய தன்மைகள், வீரசைவத்திற்கும் வீரபத்திரருக்கும் உள்ள நெருங்கிய உறவை காட்டுவனவாக காணப்படுகின்றன.

## வீரபத்திர விரதம்

மனம் பொறி வழிபோகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதலே விரதம் என்று கூறப்படும். வீரபத்திரருக்கு மங்கல வாரம் (செவ்வாய்க்கிழமை) ஒரு சிறந்த விரத நாளாகும். மங்கல வார விரதமென்பது செவ்வாய்க்கிழமை தோறும் வீரபத்திரக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும். இவ் விரதம் அநுட்டித்தல் பற்றி ஆறுமுக நாவலரின் இரண்டாம் சைவ வினா விடை பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

' காமங் கோப முதலிய குற்றங்களெல்லாவற்றையும் பற்றறக் களைதல் வேண்டும். தவறாது வைகறையிலே நித்திரை விட்டெழுந்துவிடல் வேண்டும். புண்ணிய தீர்த்தத்தையடைந்து, விபூதி, வில்வத்தடி, மண்தருப்பை, கோமயம், திலம் எனபவைகளைச் சிரசிலே வைத்து கையிலே பவித்திரஞ் சேர்த்தி, சங்கற்பஞ் சொல்லி ஸ்நானஞ் செய்தல் வேண்டும். தியானம், செபம், பூசை, ஆலயதரிசனம், பிரதக்ஷிணம், புராண சிரவணம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும். திருக்கோயிலிலே இயன்ற மட்டும் நெய்விளக்கேற்றல் வேண்டும். அபிஷேகத் திரவிய நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது பகலிலே போசனஞ் செய்தல் வேண்டும். போசனம் பண்ணுமிடத்துச் சிவனடியார் ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும். நித்திரை செய்யுமிடத்து இரவிலே கோமயத்தினால் மெழுகப்பட்ட தரையிலே, தருப்பையின் மேலே கடவுளைச் சிந்தித்துக் கொண்டு, அதிசுத்தராய் நித்திரை செய்து, வைகறையில் எழுந்துவிடல் வேண்டும். உபவாச விரத தினத்திற்கு முதற்றினத்திலே ஒருபொழுது அபராணத்திலே போசனஞ் செய்தல் வேண்டும். உபவாச விரத தினத்திற்கு மற்றை நாட் காலையிலே நித்திய கருமம் இரண்டும் முடித்துக்கொண்டு, மாகேசுர பூசை செய்து ஆறு நாழிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும். பாரணம் பண்ணியபின் பகலிலே நித்திரை செய்யாது சிவபுராணங்களைக் கேட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். நித்திரை செய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரணமின்றிக் கொன்ற மகா பாதகத்தை அடைவர்.'

இவ்விரதம் பற்றிய விரிவான சமய தத்துவ விளக்கங்களை புராணங்களிற் கண்டு கொள்ளமுடியும்.

## வீரபத்திர ஆலயங்கள்

இலங்கையில் ஸ்ரீ வீரபத்திருக்கான ஆலயங்கள் குறைந்த எண்ணிக்கையிலே காணப்படுகின்றன. நயினாதீவு, கல்வியங்காடு, சாவகச்சேரி, கோப்பாய், உடுப்பிட்டி, அல்வாய் ஆகிய இடங்களில் உள்ள வீரபத்திரருக்கு மகோற்சவ விழா நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அல்வாயில் ஆதிவீரபத்திரருக்கும், அச்சுவேலியில் வருண வீரபத்திரருக்கும், சாவகச்சேரி கோவிற்குடியிருப்பில் ஞான வீரபத்திரருக்கும், வட்டுக்கோட்டையில் வீரபத்திர சிவபெருமானுக்கும், மண்டைதீவில் சிவஉக்கிர வீரபத்திரருக்கும் புலோலி, துன்னாலை, வடுவாவத்தை உருத்திரபுரம், கச்சாய் ஆகிய இடங்களில் வீரபத்திரர் என்ற பெயரிலும் ஆலயங்கள் அமைந்துள்ளன. இவ்வாலயங்களில் அலங்கார உற்சவங்களும், பொங்கல், திருக்குளிர்ச்சி என்பனவும் நடைபெறுகின்றன. திருக்கோணமலை மாவட்டத்தில் சேனையூரில் அமைந்து விளங்கும் வீரபத்திரர் ஆலயத்தை அங்கு வாழும் விஸ்வகர்மா குலத்தைச் சேர்ந்தவர்கள் பரிபாலித்து வருகின்றனர். மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடி ஏறாவூர் காரைதீவு, புளியாந்தீவு ஆகிய இடங்களில் வீரபத்திரருக்குரிய வழிபாட்டு ஆலயங்கள் உள்ளன. இந்தியாவில திருவெண்காடு, திருப்பறியலூர் ஆகிய இடங்களில் உள்ள வீரபத்திரர் ஆலயங்கள் குறிட்பிடற்பாலவையாகும். திருப்பாறியலூரில் உள்ள திருத்தலத்தில் தக்கன் வேள்வியை சிவன் அழித்த சம்பவம் ஆண்டுதோறும் பெரிய விழாவாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடற்பாலதாகும்.

இவ்வாறாக ஸ்ரீ வீரபத்திரமூர்த்தி தொன்றுதொட்டு இன்று வரை இந்துக்களின் வணக்கத்துக்குரிய வழிபடு தெய்வமாக விளங்குகின்றார் எனலாம்.

## உசாத்துணை நூல்கள்

ஆறுமுகநாவலர், இரண்டாம் சைவ வினாவிடை
யாழ்ப்பாணம், யாழ்ப்பாண கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம் 1974

கணேசமூர்த்தி, சி. பி, ஆலய விக்கிரக நிர்மாண ஆயாதி சிற்ப இரகசியம்.
சென்னை கல்யாண அச்சகம், 1959

கைலாசநாதக்குருக்கள், கா., சைவத் திருக்கோயிற் கிரியை நெறி
கொழும்பு இந்துகலாபிவிருத்திச் சங்கம், 1963.

சண்முக சுந்தரமுதலியார், கொ (பதி) காமிகாகமம் உத்தரபாகம்
சென்னை சிவஞான போத யந்திரசாலை, 1899.

சிங்கார வேலுமுதலியார், ஆ, அபிதான சிந்தாமணி
சென்னை குமாரசாமி நாயுடு ஸன்ஸ், 1934.

கோபால கிருஷ்ண ஐயம், ப, சிவாகமங்களும் சிற்பநூல்களும் சித்தரிக்கும் சிவலிக்கிரநவியல்
கலாநிதிப் பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, யாழ்ப்பாணம் 1981.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரபத்திர அவதாரம்


கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை
விரிவுரையாளர்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்


சிவபிரானுடைய அவதாரங்களுள் ஒன்றாக விளங்குபவர் வீரபத்திரக் கடவுள். சிவன் வேறு வீரபத்திரர் வேறு அல்லர். இது சைவசமய உண்மை,

'எங்கே தர்மம் அழிந்து அதர்மம் மேலோங்குகிறதோ அங்கே தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் நான் யுகங்கள்தோறும் அவதாரம் செய்வேன்' என்றான் கீதையில் கண்ணன். அவதாரம் பற்றிய கருத்து வேறுபாடு சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் உண்டு. ஆனால் ஒரு விடயத்தில் இருசாராருக்கும் ஒற்றுமை உண்டு. அதாவது தர்மத்தைக் காப்பதும் அதர்மத்தை அழிப்பதும் பொதுவான செயலாக அமைந்துள்ளது.

திருமால் இராமனாக, கண்ணனாக ஊனுடலில் அவதாரம் செய்தான்.

'கருமுகிற் கொழுந் தெழில் காட்டுஞ் சோதியை
திரு வுறப் பயந்தனள் திறங்கொள் கோசலை'

என்பர் கம்பர். கண்ணனுடைய அவதாரம் பற்றிக் கூறவந்த ஆழ்வாரும்,

'மருள் கொள் செய்கையசுரர்
மங்க வடமதுரையில் பிறந்தான்' — —என்பர்,

அழியாத பரம்பொருள் அழிகின்ற ஊனுடலில் அவதாரம் செய்வதில்லை. என்பது சைவ சமயிகளுடைய கருத்தாகும். அதனால் தான் முருகனோ, வைரவரோ, வீரபத்திரரோ யோனி வாய்ப்பட்டுப் பிறக்கவில்லை. முருகனுடைய அவதாரம் பற்றிக் கூறவந்த கச்சியப்பரும்,

அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிளம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும், கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்குதித்தனத் உலகம் உய்ய'.

சிவபிரானது நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய நெருப்புப் பிளப்புகளே முருக வடிவம் பெற்றன என்பர் கச்சியப்பர்.

ஆணவம் கொண்ட பிரமனின் தலையை அப்பன் கொய்ய எண்ணியபோது வைரவப் பெருமானை தனது திருவுள்ளத்தின் கண்ணே நினைத்தருளினார். நினைத்த மாத்திரத்தே அவர் அவதாரஞ் செய்தார். 'நாயகன் உள்ளத்து மகிழ்வொருடு புரிந்தான் என்ப வைரவக் கடவுள் தன்னை' எனக்கூறும் கந்தபுராணம்.

வீரபத்திரக் கடவுளுடைய அவதாரமும் இத்தகையதேயாகும். அதன் வரலாற்றை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்காகும்.

பிரம தேவரின் புதல்வர்களுள் ஒருவன் தக்கன். இவனைத் தக்க பிரசாபதி என்றும் அழைப்பர். தந்தையாகிய பிரமதேவனை குருவாகக்கொண்டு வேத வேதாந்தங்களையும் கற்றுத் தேர்ந்தான் தக்கன். சங்காரத் தொழில் அதாவது அழித்தல் தொழில் செய்யும் சிவன் ஏன் சிறந்தவன் என்ற வினா இவன் உள்ளத்தில் எழுந்தது. அதைத் தந்தையிடமே கேட்டுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்துகொண்டான். சங்காரம் கொடுஞ் செயல்போல் தோன்றினாலும் உண்மையில் அதன் விளைவு ஆன்ம சுகம் தந்து அநுக்கிரகித்தலே ஆகும். இவ் அநுக்கிரக மூர்த்தியே சிவனாவான். அவனன்றி இறைவனில்லை அவனை நீ அடைதி' என்றார் பிரமதேவர்.

தக்கன் சிவனை நோக்கி வருந்தி தவம் செய்தான். சிவனும் அவனுடைய தவத்தை மெச்சி காட்சி தந்து உனக்கு வேண்டும் வரம் யாதோ என்றார். தக்கனது புத்தி விதிவழியே சென்றது. மதிவழியே செல்லத் தவறிவிட்டது. பரமபதியிடம் 'பிறவி மாற்றும் முத்தியதிருந்திலன்' அவன் பிரம விஷ்ணுகளை விட கூடிய அதிகாரங்களையும் செல்வங்களையும் கேட்டுப் பெற்றுக்கொண்டான் அத்துடன் அவன் திருப்திப்படவில்லை. உலகமாதாவாகிய உமையை தனக்குப் புதல்வியாகப் பிறக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டான். இதனால் பரம்பொருளாகிய சிவனை மருமகனாக அடையலாம் என்ற பேராசை இவனுக்கு இருந்தது. சிவனும் கேட்ட வரமெல்லாம் தந்து 'நன்நெறி நின்று எண்ணின் நிலைக்கும் இச்சீர்' என்று கூறி மறைந்துவிட்டார்.

பிரமா விஷ்ணு இந்திரன் முதலியோர் எல்லாம் அடிபணிய தக்கன் அரசோச்சலானான் இவனுக்கு கர்வம் தலைக்கேறியது. 'செல்வம் வந்துற்ற போது தெய்வமும் சிறிது பேணார் என்பர் அறிஞர். இவனுக்கு செல்வம் மட்டுமா கிட்டியது. உலக மாதாவே மகளாகக் கிடைத்துவிட்டார். உலக நாயகி இது தன் தவக் குறைவால் உண்டாகியது என எண்ணி மீண்டும் தவஞ்செய்யப் புறப்பட்டுவிட்டாள்.

தக்கனுக்கு ஆணவம் தலைக்கேறிவிட்டது. சிவன் பரம்பொருள் என்பதை மறந்துவிட்டான். அவனுடைய ஆத்திரம் எல்லை கடந்துவிட்டது. சிவனை நிந்தனை செய்யத் தொடங்கிவிட்டான். இத்துடன் அவன் நின்றுவிடவில்லை. சிவனுக்த அவி கொடாது அவரை அவமதிப்பதே அவனுடைய நோக்கமாகும் சிவன் தடுத்ததையும் பொருட்படுத்தாது அன்னை வேள்வி நிகழும் இடத்திற்குச் சென்றாள். அங்கே தக்கன் சிவசிந்தனை செய்வதைக் கண்டு வருந்தி யாகாக்கினியால் தன்னுடலை நீத்து தக்கனுடைய மகளென்னும் நிலையிலிருந்து விடுவித்து பர்வதனுடைய மகளாக பார்வதியாக அவதரித்துக்கொண்டாள். இந் நிலையில் தான், கோபம் கொண்ட சிவபிரான் வீரபத்திரக் கடவுளாக அவதாரம் செய்கின்றார். சிவன் கோபம் கொள்வதென்பதும் கருணையினால்தான். தவறு செய்யும் பிள்ளையைத் தண்டிக்கும் தந்தையின் செயலே இதுவாகும்.

'பொன்னின் மேருவிலிருந்திடு பொருங் குவடெலாம்
மின்னும் வெள்ளி முளை மேலொரு விளங்கியதென
மன்னு தண்சுடர் மதிக்குறை மிலைச்சு மொரிச்
சென்னி ஆயினும் வான் முகடு சென்றொளிரவே.'

வீரபத்திரக்கடவுள் தோன்றினார்.

தக்கன் யாகத்திலே சிவனுக்குரிய அவிர்ப்பாகத்தை திருமாலுக்கு வழங்க முன்வந்தான். திருமாலும் அதை ஏற்க முன்வந்தார். அப்பொழுது அந்திக்காலத்து வானம் போன்ற திருமேனியுடையவரும் நஞ்சையணிந்த கண்டத்தையுடையபரம பிதாவின் சொரூபத்தையுடையவருமாக சிவபெருமானின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றிய வீரபத்திரக்கடவுள் சிவனார் முன் தோன்றினார்.

'அந்திவான் பொரு மேனியன் கறைமிடற்றணிந்த
எந்தை தன் வடிவாயவன் நுதல் விழியிடையே
வந்து தோன்றியே முன்னுற நின்றனன் மாதோ
முந்து வீரபத்திரன் எனுந்திறனுடைய முதல்வன்.'

தக்கானால் தர்மம் அழிந்தது. அதர்மம் மேலோங்கியது. அப்போது தர்மத்தை நிலைநாட்ட சிவபிரான் வீரபத்திரராக அவதாரம் செய்தார். சிவன் வீரபத்திரரைப் படைத்தார் என்றும் கூறும் வழக்கம் உண்டு. எனினும் சிவனே வீரபத்திரரானார் என்பது முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரரை அப்பன் படைக்க அம்மை வீரபத்திரருக்கு துணையாகிய வீரபத்திரியை (பத்திரகாளியை) படைத்தாள். உமை வேறு வீரபத்திரர் வேறு அல்லர். இருவரும் ஒருவரே ஆவர். இருவரையும் நோக்கி நீங்கள் யாகம் செய்யும் இடத்திற்கு செல்லுங்கள். எனக்கு உரிய அவிர்ப்பாகத்தைக் கேட்டு வாங்குங்கள். மறுத்தால்........... அவன் தலையினைத் தடிந்து,

பரிவினாலெவன் பகலுறுவோரையுப் படுத்த
புரியுமெச்சமும் கலக்குதி' என்றனர்.

அவன் தலையைக் கொய்து அவனுடைய அனுதாபிகளைக் கொன்று யாகத்தையும் அழித்து வருவாயாக என அப்பனும் அம்மையும் பணித்தனர். வீரபத்திரரும் பத்திரகாளியும் யாகசாலையை அடைந்தனர். கண்டோரெல்லாம் மனது நடு நடுங்கினர். அதனால் தக்கனோ அசையவில்லை. மூடன் எப்போதும் எதற்கும் அஞ்சான் ஏனெனில் அவனுடைய அறிவீனம்தான் அதற்கு காரணம். வீரபத்திரரின் வேண்டுகோளைத் தக்கன் புறக்கணித்து விட்டான். அதனால் ஆத்திரம் அடைந்த வீரபத்திரர் தக்கனின் தலையைக் கொய்து வேள்வித் தீயில் இட்டார். இதனைக் கச்சியப்பர் பின்வருமாறு அழகாகக் கூறுவர்.

'கண்டு மற்றது வீரபத்திரனெனுங் கடவுள்
கொண்ட சீற்ற மோடேவிய தக்கனைக் குறுசி
அண்டரோடு நீ ஈசனை இகழ்ந்தனை அதனால்
தண்டமீதென வாள் கொடியவன் தலை தடிந்தார்.'

அப்பொழுது அங்கே நின்ற அனைவரும் அஞ்சியோடினர். இமையோரும் முனிவர்களும் தியக்குற்றனர், 'வெருவுற்றனர், திடுக்கிட்டனர், மயக்குற்றனர்' என்பர் கச்சியப்பர்.

பின்னர் அங்கு வேள்விக்கென நின்ற ஆட்டுத்தலையைத் தக்கனுடலில் பொருத்தி அவனை உயிர்ப்பித்தார். வீரபத்திக் கடவுள் சிவனை மறந்தவன் தெய்வ நிலையில் நின்றும் மிருக நிலைக்கு தள்ளப்பட்டான்.

வீரபத்திரனின் கோபம் திருமாலிடம் சென்றது. சிவனே முழுமுதற் தெய்வம். அவனே அவிர்ப்பாகத்திற் குரியவர் என்பதை மறந்து அவிர்ப்பாகத்தை ஏற்கச் சென்ற குற்றம் தண்டனைக்குரியது. அதனால் திருமாலையும் தண்டிக்கலானார்.

எந்தத் தேவர்கள் சிவனை மறந்து தக்கனை மதித்து வேள்விக்குச் சென்றார்களோ. அவர்களையெல்லாம் தண்டித்த வீரபத்திரரும் வீரபத்திரையும் அவ்விடம் விட்டகன்றனர் ஆனால் தேவர்கள் செய்த பாவமோ அகன்றபாடில்லை. அதனால்தான் பல்லாயிரம் ஆண்டுகள் அசுரர் கையில் சிக்கி துன்படையலாயினர். பின்னர் தமது தவறுகளை உணர்ந்து வருந்திய போது முருகப்பெருமான் அவதாரம் செய்து தேவர்களைக் காக்கலானார்.

வீரபத்திரர் அவதாரம் எமக்கெல்லாம் போதிக்கும் உண்மை முக்கியமானது. நன்றி மறந்து செயற்படும் யாவரும் உய்தியடைவதில்லை. இறைவன் செய்த நன்றியை மறந்த தக்கனும் தக்கனுக்கு உடந்தையான தேவர்களும் தண்டிக்கப்பட்டமை நமக்கெல்லாம் சிறந்த பாடமாக அமைகிறது. செய்த பாவங்களை உணர்ந்து அவனடியில் விழும்போது அவன் எம்மைக் காக்கத் தவறமாட்டான். என்பதும் இதனால் பெறப்படும் மற்றோர் உண்மையாகும்.

'அடைந்து அவி உண்டிடும் அமரர்யாவரும்
முடிந்திர வருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமகம் ஒடியத் தக்கனை
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்'

(கந்தபுராணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரத்திருமகன் வீரபத்திரன்

திரு. சி. வேலாயுதம்
*பிரதிக் கல்விப் பணிப்பாளர்*
*யாழ்ப்பாணம்*

*'தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்' என்பது மணிவாசகரின் அமுத வாக்கு. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனனாய நஞ்சுண்டகண்டன் நெற்றித் தீயில் நேமி காக்கத் தோன்றியவன் வீரத்திருமகன் வீரபத்திரன். கல்வியங்காட்டின் காவலனாகக் கனிந்த முகத்தொடு காரிருள் கீறும் கதிரவன் போன்ற எங்கள் தெய்வம் தேரேறி வரும் காட்சி பிறவிப் பயனைத் தரவல்லவன்றோ.*

*'விரும்பியே உள்ளம் வெளியுறக் கண்டபின்*
*கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே' என்பது திருமந்திரம். தேனும் கரும்பும் உண்ட மாத்திரத்தில் நாவிற்கு மட்டும் சிறிது இனிமையை நல்கும். நினைக்கும் தோறும் காணும் தோறும் பேசும்தோறும் பரிசிக்குந் தோறும் எப்பொழுதும் அணைத்தெம்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் வீரத்திருமகனின் அருட்பார்வை எம்மனோர்க்கு ஆன்ம ஈடேற்றத்தை நல்குமன்றோ.*

*'தாவாரமில்லை தனக்கொரு வீடில்லை*
*தேவாரமேதுக்கடி குதம்பாய் தேவரமேதுக்கடி' என்ற குதம்பைச் சித்தர்பாடிய பாடல் பொருள் பொதிந்த பாடலாகும். அருள்மழை பொழியும் அரனார் திருமகன் சேவடி சேர மன்பதை செய்ய வேண்டியதைச் சித்தர் செப்பும் கீர்த்தி சிறப்பானதே. மற்றவர்கள் படும் துன்பத்தில் பங்குகொண்டு, நான் என்ற ஆணவத்தை அடியோடு அகற்றி வாழ்தலே வாழ்வு என்கின்றார். இதனாலேயே வான் புகழ் வள்ளுவன் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்றார். தேவாரம் அர்த்தமுள்ளதாகவிருக்க, அதனால் அகவிருள் போக்கி ஆன்மா ஈடேற்றமடையத் தன்னைப்போற் பிறரை நேசிக்கும் பெருவாழ்வைப் பேசாற்பேசும் பெற்றி சிந்திக்கப்பாலதே.*

*அரன் ஆடற்திருமகன். அகிலம் புரக்கும் அறவாழி அந்தணன் விண்சுமந்த மண் சுமந்த பெண் சுமந்த பேராளன் எச்சங்கள் நான்கு. நான்கும் நல்ல திருக்குமாரர்கள். விக்கின விநாயகன், வைரவக்கடவுள், வீரபத்திரன், மயூர மயில்வாகனம் இவர்கள் வீரம் செறி விளையாட்டுக்கள் புராணங்கள் கூறும் செய்திகளாகும். தேறுாறு கிழவிக்கு வாயூறி நின்ற வேலவன் போல் வீரப்பிரதாபத்தின் விளைநிலமே வீரபத்திரன். தந்தையின் சிந்தையில் எழுந்த சினமகல ரிளை மகனாய் சீறிடும் நாகமாய் சங்காரம் செய்த வீரபத்திரக் கடவுகளுக்கு ஆலயம் பொலிந்த மண் கல்வியங்காடு. ஆறில்லா ஊருக்கு அழகு பாழ், நீறில்லா நெற்றிபாழ் என்பது போல கோயிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாமென்றனர் ஆன்றோர். ஈந்தச் சீர்பெருகு சொற்களைச் சிந்தையில் பொருந்திய சைவபெருமக்கள் தூயவெண்ணீறு துதைந்த மேனியராய் விளங்க விளங்கும் வீரபத்திரர் ஆலயம் வயக் கொளிர்மிககதாய், வலம் வர மஞ்சமும் தேருமாய் தொண்டர்கள் தொண்டுடைத்தேவாலயமாய் துலங்குவது பாராட்டத்தக்கதே.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர் என்ற அடிகளை உன்னி வீரபத்திரன் திருவுருவைக் கைகூப்பி சென்னி மேல் வைத்துச் சிந்தையை ஒருமைப்படுத்தல் அவ்வூர் வாழ் மக்களின் தலையாய கடனாகும். அவனன்றி ஒரு அணுவும் அசையாது என்பது மெஞ்ஞானிகளின் பட்டறிவு வாக்கியம்.

நாம் அல்லலறுத்துத் தொல்லிரும் பிறவித் துயர் தொலைத்து வாழ அருள்பாலிக்கும் சிவனார் திருமகன் எங்கள் கிராமத்து பேரொளியே. ஞானபானுவான வீரபத்திரன் இன்றைய யதார்த்த உலகிலும் வெம்பகை போக்க, வரும்பகை வெல்ல உறுதியுடைய நிலை குலையா நெஞ்சினைத்தர வேண்டும் இறைவனுமாவார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க புனித வாய்மலர்ந்தழுத ஞான சம்பந்தன் பசுங்கிளியை நோக்கி

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உனத்தருவேன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே'

என்று இறைவன் மீதுகொண்ட பேரார்வத்தைப் பாட்டால் நாட்டுகிறார். பேசாத நாள் பிறவா நாள் என்பதும் சிவன்தாள் நினைக்க வேண்டுமென்ற நாவுக்கரசன் நய மொழியும் இறைவன் பெருமையைப் பறைசாற்றுகின்றதன்றோ. அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்த கடவுள் அருவும் உருவும் உள்ள இன்பசோதி. இவனைக் காண அறிவுக்கண் எம்மனோர்க்கு வேண்டுமென்றே. இந்தக் கடவுளை

பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காம் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி.

என்கிறது திருவாசகம்.

'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ"

எனத் தித்திக்கத் தித்திக்கத் திருவாசகம் பாடிய மணிவாசகன் கூறும் போது கண்டுபோற்றும் வீரபத்திரனும் பரம்பொருளே. அவனுருவே எனத் துய்க்கலாம். இக்கருத்தினைப் பாரதி

'தெய்வம் பல பல சொல்லிப் - பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - ஒங்கும் ஓர் பொருளானது தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்'

என்றார். கடவுளிடம் நாம் செலுத்தும் அன்பு பக்தி என்று சிறப்பித்துக் கூறப்படும். பக்தி முதிர்ந்த நிலையில் தெய்வம் பித்து வந்துஎய்தும். தெய்வப் பித்தராகவே வாழ விரும்புவர் பக்தர் கடவுளைப் பெரும் பித்தன் என்று பாடினவரும் உண்டு.

'தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி' என்பது திருவாசகம். சிவனடியார்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்திநாயனார் தம்மை ஆட்கொண்டருளிய பெருமானைப்

'பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
அத்தா உனக்காளாய் இனியல்லேன் எனலாமே' என்று திருப்பாசுரம் பாடினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதம் தழைக்க மாசற்ற சோதியாய் தேசுற்ற திருக்கோலத் தெய்வம் வீரபத்திரனே. அவன் பாதமலர் சரண்புகுந்த அடியார்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பன் கழறிய

'உலகம் யாவையும் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரன் நாங்களே'

என்ற பாடல் கல்வியங்காடெனும் திருப்பதியில் வாழும் மக்களுக்குப் பொருந்துவதாகும்.

'தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது'

என்றதே பொதுமறை. ஆதலால் வீரத் திருக் கோலத்துடன் விளங்கும் வீரபத்திரனை வணங்குவோர்க்கு

'உட்செவி திறக்கும் அகக்கண் ஒளிதரும்
அக்கினி தோன்றும் ஆண்மை வலியுறும்
திக்கெலாம் வென்று ஜயக்கொடி நாட்டலாம்
கட்செவி தன்னைக் கையிலே எடுக்கலாம்
விடத்தையும் நோவையும் வெம்பகையதனையும்
துச்ச மென்றெண்ணித் துயரிலாதிங்கு
நிச்சலும் வாழ்ந்து நிலைபெற்றோங்கலாம்'

என்ற திட சிந்தை நிறைந்திடுக. அவனது வீரத் திருவிழிப்பார்வை எம் மன்னை ஒளிரச் செய்வதாக.

கல்வியம் பதியில் வாழும் கங்கைவார் சடையன் மைந்த
அல்லுநற் பகலுமுன்னை அகங்கொள வேண்டுமெங்கள்
தொல்லைகள் துயரம் யாவும் துடைத்துமே காக்க நாளும்
முல்லை நம்மலரால் நின்னை மொய்ம்புற அர்ச்சிப் போமே.



அன்னைதாசன்
சி. க. ஆனந்தராசா ஆசிரியர்
உரும்பிராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீமைகள் ஓட்டும் தேரோட்டம்

பிரம்ஸ்ரீ வ. நகுலேஸ்வரசர்மா  ஆலய உதவிக் குரு

உயிர்கள் அனைத்தும் உய்தல் வேண்டி எல்லாம் வல்ல பரம் பொருள் பெரும் கருணை கொண்டு எடுத்த வடிவங்கள் பல எண்ணிலடங்கா. இவற்றுள் சிறப்பு மிக்கது அஷ்ட வீரட்டானங்கள். அவற்றுள் தக்கன் யாகம் அழித்தமை ஒன்று. அதற்கென்று இறைவன் வீரபத்திரர் வடிவம் எடுத்தமை புராணங்கள் வாயிலாக நாம் அறிந்ததே. அந்த வீரபத்திரர் பெருமான் முப்புரம் எரித்த நிகழ்வை நினைவூட்டுவதற்கும் நம்மிடையே காணப்படும் ஆணவம், கன்மம், மாயை எனும் முப்புர அசுரத்தன்மை களையும் பொருட்டு தேர் ஏறி வருகின்றார்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்கிற பெரியோர் வாக்கிற்கு அமைய ஈழத்தின் வடபால் யாழ்நகரில் கல்வியங்காடு எனும் திவ்விய திருப்பதியில் பத்திரகாளியுடன் வீரபத்திரர் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார். இங்கு நடைபெறும் மஹோற்சவத்தில் நடு நாயகமாக விளங்குவது 'ரதோற்சவம்' ஆகும். கல்வியங்காடு வாழ் மக்களின் அரும் பெரும் உதவியோடு அழகிய சித்திரத்தேர் உருவாகியுள்ளது. மிகவும் நுண்ணிய வேலைப்பாடுகளும் கலைத்திறன் மிக்கதுமான இந்த அழகிய சித்திரத் தேரில் வீரபத்திரப் பெருமான் வீதியுலா வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவே விளங்கும்.

இந்த தேரின் தத்துவத்தை நோக்கின் தேரின் தத்துவம் பற்றிய பல நூல்கள் கூறுகின்றன. பூமியை தேரின் அடிப்பாகமாகவும் 8 திக்குகளை பவளக்கால்களாகவும் ஆகாயத்தை மேல் விமானமாகவும், சூரிய சந்திரரை தேரின் சக்கரமாகவும், பிரம்மாவை தேர்ச் சாரதியாகவும், நான்கு வேதங்களும், ஆகமமான ஐந்து குதிரைகளாகவும் கொண்டு எம் பெருமான் மேருவை வில்லாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினிதேவனை அம்பின் கூராகவும் கொண்டு திரிபுர சங்காரம் செய்ததாக புராணங்கள் கூறுகின்றன. அவ்வாறு இறைவன் சம்ஹாரம் செய்வது உயிர் கொலை அல்ல. அவற்றிடையே காணப்படும் ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மும்மலங்களே ஆகும். முற்றுமுழுதாக நோக்கின் தேர் உயரிய ஒரு தத்துவத்தை விளக்கி நிற்கின்றது.

அதே போல் தேரின் அடிப்பாக பூலோக வாழ்க்கை சுவர்க்க வாழ்க்கை என்பவற்றை சித்தரிக்கும் சிற்பங்களை கொண்டுள்ளது. "ரதம்" உடல் தத்துவத்தை விளக்கி நிற்கிறது. இந்த உடலை ரதமாக கொண்டால் உடலின் உள்ளிருக்கும் ஆன்மாவை ஊர்ந்து செல்பவன் என்று கருதப்படும். இந்த உடலின் இயல்புகள் அனைத்தும் ரதத்தில் அமைந்துள்ளது. முதலாவது தட்டு சுகபோக இன்பத்தையும், இரண்டாவது தட்டு சிங்கரர், கந்தர்லர் வாழ்க்கை முறையையும் விளக்க, மூன்றாவது தட்டு இறைவனின் "லீலை" களையும் விளக்குவதாய் அமைந்துள்ளது.

எம் உள்ளத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள எம் குல தெய்வமாகிய வீரபத்திர பெருமானை புதிய சித்திரத் தேரில் எழுந்தருளச் செய்யும் பாக்கியம் மிககுறுகிய காலத்தில் கிடைத்துள்ளமை "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" எனும் வாசகத்திற்கமைய வீரபத்திரப் பெருமானின் பெரும் கருணை கருணையே ஆகும். இச் சித்திரத்தேரை அமைத்த சிற்பாசசாரியாரும், நிதி உதவி புரிந்த அடியார்கள் எல்லோருக்கும் நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வங்களும் கிடைப்பதற்கு எல்லாம் வல்ல வீரபத்திரர் பெருமானை இறைஞ்சி அடியார்கள் எல்லோரும் இப்புதிய சித்திரத்தேரில் பெருமான் பவனி வரும் அரிய காட்சியை கண்டு பக்திப் பெருக்கோடு வணங்கி தம் மனக் குறைகளை வேண்டியும் நாட்டில் தீவினை எல்லாம் அழிந்து அறம் மேலோங்கி அமைதியும் சாந்தமும் உருவாகி துன்பம் யாவும் களைந்திருக்கும் பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமானை வணங்கி நிற்போம்.

ஸர்வே ஜநா : ஸுகினோ பவந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சௌந்தர்ய லஹரி வெளிப்படுத்தும் கல்வித் தரிசனங்கள்

கலாநிதி சபா. ஜெயராசா
முதுநிலை விரிவுரையாளர், கல்வியியல் துறை
தலைவர் : இராமநாதன் நுண்கலைப்பீடம்
யாழ். பல்கலைக் கழகம்

கல்வியும், மந்திரமும், சமயமும் ஒன்றிணைந்த சமூக இயக்கத்தின் அறிவுக்குறியீடாக இந்திய மரபிலே தோன்றிய நூல்களுள் சௌந்தர்ய லஹரீ குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும்.

இந்நூல் மகாமேரு மலையீல் விநாயகரால் எழுதப்பட்டதென்று இலிங்கபுராண விநாயகர் வாழ்த்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேருமலையிலிருந்து அதனைக் கௌடபாதர் கிரகித்துப் பின்னர் ஆதிசங்கருக்கு உபதேசம் செய்ததாக சௌந்தர்ய லஹரியைத் தமிழ்ப் பாடலாக்கிய வீரைகவிராஜ பண்டிதர் கூறுகிறார். இச் சம்பவங்கள் நூலின் தொன்மையையும், ஐதீகங்களுடன் இணைந்த சமூக மானிட இலக்கிய வெளிப்பாட்டினையும் சுட்டிக்காட்டுகின்றன.

இந்திய அழகியற் பின் புலத்திலே சக்தி வழிபாட்டினைச் சாராம்சமாக்கித்தரும் ஒரு பனுவலாக இது விளங்குகின்றது. இந்நூலுக்கு முப்பத்தாறு வியாக்கியானங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் லக்ஷ்மீதாருடையது மிகவும் சிறந்ததாக முன்மொழியப்படுகின்றது. காஞ்சிகாமகோடி சங்கராச்சாரியார் இந்நூலிலுள்ள சுலோகங்களைத் தமது உபந்நியாஸங்களுக்குப் பெருமளவிலே பயன்படுத்தினார்.

அம்பிகையைப் பூசிப்பதற்கு சௌந்தர்ய லஹரீ ஸ்தோத்திரங்கள் பெருமளவிலே பயன்படுத்தப்படுகின்றது. பொதுவாக ஸ்தோத்திரங்கள் ஆறு வகையான இலட்சணக்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென இந்திய சமயக் கல்வியிலே வற்புறுத்தப்பட்டுள்ளன. அவையாவன:-

(1) நமஸ்கரித்தல்
(2) ஆசிகூறுதல்
(3) கோட்பாட்டை எடுத்துரைத்தல்
(4) வீரத்தைப் புகழ்தல்
(5) பெருமைகளைப் புனைதல்
(6) பிரார்த்தனை செய்தல்

என்பனவாகும்.

இந்த இலட்சணங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய ஸ்தோத்திரங்களைச் சௌந்தர்ய லஹரீ கொண்டுள்ளது. அவற்றினூடாகப் பின்வரும் கல்வித் தரிசனங்களை இந்நூல் தெளிவாக முன்வைக்கின்றது.

(1) அவித்தை குடிகொண்டவர்களுடைய உள்ளத்து அகத்து இருள் போக்கல்.
(2) அவிவேகிகளுக்கு ஆத்மஞானம் தருதல்.
(3) அறிவில் ஏழ்மை உடையவர்களுக்குச் சிந்தாமணிக் குவியலாம் அறிவுப்பலத்தைக் கொடுத்தல்.
(4) பிறவிக்கடலில் மூழ்கியவர்களுக்கு வழிகாட்டும் அறிவுப்பலத்தைக் கொடுத்தல்.
(5) உபநிஷதங்கள் பேசும் நிர்க்குணப் பிரமத்தைச் சக்தி தரிசனங்களாலே விளங்கிக் கொள்ளல்.
(6) கல்வியின் பெறுபேறு மங்களகரமாக அமைக்கப்படுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி வழியாக சமூக இயக்கத்தின் பன்முகப் பரிமாணக்களுடையே இசைவாக்கவும் செய்யவல்ல தேவைகள் இந்நூலின் வழியாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நிர்க்குணமும், சகுணமும், கருமமும், பக்தியும், யோகமும், ஞானமும், அத்துவைதமும், துவைதமும், இல்லறமும் துறவறமும், என்றவாறான அறிகைப் பரிமாணங்கள் வளர்ந்து கொண்டு சென்ற சமூக இயலின் வெளிப்பாடுகளையும் அவற்றுக்கிடையே இசைவாக்கம் செய்து ஒருங்கிணைப்பு உறுதிசெய்தலையும் இந்நூல் திடப்படுத்துகின்றது.

இவ்வாறான ஒன்றிணைப்பு சமயம் – சமூகம் – கல்வி என்பவற்றுக்கிடையேயான வலிமையான ஒன்றிணைப்பாக விரிவாக்கப்படுகின்றது.

ஆத்ம சமர்ப்பண பாவனையால் வெறும் பேச்சுக்கள் ஜபமாக மாறுகின்றன. கைத்தொழில்கள் அனைத்தும் சக்தி ஆராதனைக்குரிய முத்திரைகளாகின்றன. இயங்குதல் சக்தியைப் பூசிப்பதாகவும், உண்ணும் உணவு ஹோமமாகவும், துயிலுதல் நமஸ்காரமாகவும், இன்னும் என்ன முயற்சிகள் உண்டோ அவை அனைத்தும் சக்தி பூசையாகவும் மலரட்டும்.

(சௌந்தர்ய லஹரீ – 27)

கல்வி என்பது சமூக விளைபொருள், சமூகச் செயற்பாடுகளில் இருந்து முகிழ்த்தெழும் இலக்குகள் கல்வி இலக்குகளாகப் படிமலர்ச்சி கொள்கின்றன. சௌந்தர்ய லஹரியை விளங்கிக் கொள்ளல் பாரம்பரியமான இந்திய சமூகத்தையும், கல்வியையும் விளங்கிக்கொள்வதாக அமைகின்றது.

சமூக ஏற்றத்தாழ்வுகள் கூர்ப்படைந்த வேளை சமூக சமத்துவம் பற்றிய சிந்தனை ஆய்வறிவாளரின் இலட்சியமாக வளர்ந்தன. இவ்வாறான கருத்துப் பாய்ச்சலுக்கு சமய இலக்கியங்கள் துணையாக அமைந்தன. சக்தியை வழிபடும் பொழுது எல்லாவற்றையும் சமமாகப் பார்க்கும் திருஷ்டியும், எந்த விஷயத்திலும் மோகம் ஏற்படாத நிலையும் உண்டாகின்றது. சக்தியின் கரத்திலே புத்தகம் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுதல் (சௌந்தர்ய லஹரி 15) அறிவை முதன்மைப்படுத்தும் குறியீட்டு வடிவமாகின்றது.

உலகம் அறுபத்து நான்கு சாத்திரங்களால் நிரப்பப்பட்டுள்ளமை பற்றிக் குறிப்பிடப்படுதல் (சௌந்தர்ய லஹரீ – 31) ஒருபுறம் அறிவைப் பகுத்தாராயும முயற்சியாகவும் மறுபுறம் அறிவு – சமயம் என்பவற்றுக்கிடையேயுள்ள இடைவினைகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமைகின்றது. சமயத்தைத் தேடுதல் கல்வியைத் தேடுவதாகவும், கல்வியைத் தேடுதல் சமயத் தேடுதலாகவும் அமைகின்றன.

சிவம் எனும் பொருளும் ஆதி சத்தியொடு
சேரின் எத்தொழிலும் வல்ல தாம்
இவள் பிரிந்திடின், இயங்குதற்கும் அரிது
அரிது எனா மறை இரைக்குமால்
நவபெரும் புவனம், எவ்வகைத் தொழில்
நடத்தி, யாவரும் வழுத்து தாள்
அவனியின் கண் ஒரு தவம் இலார், பணியல்
ஆவதோ? பரவல் ஆவதோ?

வீரை கவிராஜ பண்டிதரின்
மொழிபெயர்ப்பு

# இளமை நலங்கனியும் கடவுளர்

வித்துவான் க. சொக்கலிங்கம் M. A., Ex S. L. E. A. S.

செந்தமிழ் மணக்கும் திருநாட்டிலே வாழ்கின்ற சிறப்புப் பெற்ற நாம் சைவத் திருநெறியையும் அதன் செழுமையினையும் கண்போலப் போற்றி வருகின்றோம். சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். எங்கும் நிறைந்தவரும் எல்லாம் அறிபவரும் எல்லாம் வல்லவருமான அவர்தம் திருக்குமாரர் நால்வர். விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் என்பன அவர்களின் திருப்பெயர்கள். மக்களும் தேவரும் உலகிலே அறம் நலிந்து மறம் ஓங்கிக் கொடுமைகள் பெருகும் காலங்களில் அக் கொடுமைகளின் கடுமை தாங்காது பேசிடருக்கு உள்ளாவது கண்டு, சிவபெருமான் தமது பேரருளுடைமை காரணமாகத் தம் முலடய மூர்த்தங்களாய்த் தோற்றுவித்தருளியவர்களே இந் நால்வரும். அவர்களின் திருவுருவங்களை இளமை நலங்கனிய வடித்து, ஆலயங்களில் எழுந்தருளுவித்து நாம் வழிபட்டு வருகின்றோம்.

'என்றும் இளையாய் அழகியாய்' என்று முருகப் பெருமானை உளங்கனிந்து புலவர் ஒருவர் அழைக்கின்றார். முருகனுக்கு மூத்தவரான விநாயகரும் என்றும் இளையவரே. வெள்ளை நிற ஆடைதரித்து, நான்கு திருப் புயங்களோடு. சந்திரன் போலும் தண்ணிய நிறத்தினராய், மகிழ்ச்சி மலரும் திருமுகத்தோடு அவர் காட்சி தந்தருள்கின்றார். வைரவரும் வீரபத்திரரும் அச்சந்தரும் வடிவினராய்க் கோலங்காட்டிய போதும் அவர்களும் மறம் அழித்து அறங்காத்து மக்களுக்கு மாறாத மகிழ்ச்சியை வழங்கவென்றே வடிவு கொண்டவர்கள். இவர்கள் நால்வரும் இளையவர்கள், இளைஞர்கள்.

"இரும்பு போன்ற தசைகளும் எஃகு போன்ற நரம்புகளும் எதனாலும் தடுக்க வியலாத ஆற்றல்களும் வாய்ந்த இளைஞர்களே எம்நாட்டுக்குத் தேவை" என்றார் வீரசுவாமியாகிய விவேகானந்தர். சைவ நெறியினைக் கடைப்பிடித்த எம்முன்னோர் தமது கடவுட் கற்பனையிலே இளமை நலம் அமையுமாறு வகுத்துக் கொண்டமையும் இத்தேவையினை நோக்கித்தான் போலும்.

ஒரு காலத்தில் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் தமிழ் நாட்டிலே தலையெடுத்தன. இந்தச்சமயங்களைச் சார்ந்தோர் சிறந்த அறிஞர்கள். ஆனால் 'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக'ப் பெறாதவர்கள். அதனாலே உலக வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாகக் கண்டார்கள்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

என்ற திருவள்ளுவரின் திருவாய் மொழியின் மெய்ம்மை இவர்களுக்கு எட்டாத ஒன்றாய் இருந்து வந்தது. எனவே இந்த அவைதிகர்கள், சிறப்பாகச் சமணர்கள் உலகநிலையாமை, யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை பற்றியே பேசித் துன்பியற் கொள்கைக்கு (Pessimism) வித்திட்டார்கள். ஆனால் 'வையத்துள் வாழ்வாங்கு' வாழ்ந்து அவ்வாழ்வின் பயனாக 'வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படலா'ம் என்று நம்பிய சைவமக்களோ இன்பியற் கொள்கையிலே (Ottimism) திளைத்தவர்களாதலால் இறைவனையே 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவனாயும், அவனுடைய திருக்குமாரர்களாய்ப் 'பிடியதன் உருவுமை கொளமிகு கரியது வடிவினராய்'க் கணபதியும். 'பெற்றம் உகந்த கந்தனும்' வந்துதித்தவராயும் காட்டினர். உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' என்று கொண்டனர்; உடம்பார் அழியின் உயிரார் அழி'வர்' என்றனர்; 'இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்' என்று ஏத்தினர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவு வாழ்வினை வற்புறுத்திய சமணத்துக்கு அறைகூவலாய் உறவு வாழ்வினை உவந்து கடைப்பிடித்தனர். இந்த உவப்பின் பயனாய் உதித்த இளம் கடவுளரே விநாயகர், முருகன் முதலியோர்.

இளமை ஆற்றல் நிறைந்தது; தன்னலம் கருதாதது; தூய்மையானது; கொடுமை கண்டு பொங்கி எழுவது; எழில் நிறைந்தது. அது சாதிக்க நினைத்துச் செயலில் இறங்கினால் ஆகாதது ஒன்றில்லை. ஆனால் சில வேளைகளில் அது பிழையான வழியிலே செலுத்தப்பட்டால் சமூகத்திற்குத் தீங்கு உண்டாவதையும் தவிர்த்தல் இயலாது. அவ்வாறு தீமை உண்டாகாது இருத்தற்காகவே எம் முன்னோர் கடவுளை நல்லவையாவிற்கும் உறையுளாய் கொண்டு அவற்றை வெளிப்படுத்தி நானிலத்தை காத்திட அவரை இளைஞர் திருவடிவங்களில் உருவகித்துக் காட்டினர். அவர்களின் செயற்திறங்களால் அறம் வாழ்வதாகவும் மறம் அழிந்தொழிவதாகவும் அரிய பெரிய உண்மைகளைப் புராண இதிகாசக் கதைகளாக வடித்துத் தந்தனர்.

விநாயகப் பெருமான் கயமுகாசுரனைச் சங்கரித்து, அமரர்க்கும் மண்ணவர்க்கும் இன்பம் பெருகிடும் இனிய வாழ்வினை வழங்கியருளினார். முருகப்பெருமான் கிரவுஞ்சகிரியைப் பிளந்தும், சிங்கன், தாரகன் ஆகியோரைச் சிதைத்துப் சூரபன்மனை ஆணவம் அடக்கியும் தேவர் சிறைமீட்டார். வைரவக்கடவுள் 'பரமனை மதித்திடாப் பங்கையாசனன் ஒருதலை கிள்ளி, ஒழிந்தவாறுளோர் குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்' புரிந்தார். வீரபத்திரக்கடவுள் சிவபெருமானை மதித்திடா தக்கனின் வேள்வியை அழித்தும் அவன் சிரம் அரிந்தும் தேவர்களைத் தன் தாக்குதலாலே வலியொடுக்கியும் ஆணவ இருளை ஓட்டெடுக்க வைத்தார். இவ்வாறு இளமை நலங்கனிந்த கடவுளர், முப்புரம் எரிசெய்த சிவனாரும், மகிடாசுரமர்த்தனம் புரிந்த உமையாளும் வகுத்த வழிநின்று மறங்கடிந்து அறங்காத்து மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் மகிழ்வளித்தார்கள்.

'சுற்றிநில் லாதே போபகையே
துள்ளி வருகுது வேல்'

என்றாங்கு பகைகடிந்து தமர் காத்ததோடு இக்கடவுளரின் கடமைகள் முடிந்திடவில்லை. தமது திருவிளையாடல்களால் உலகிற்கு உண்மையை விளங்க வைத்தமையும் அவர்கள் தம் அருட் செயல்களே. திருவினை + ஆடல் = உலகிற்கு ஞானமாகிய திரு (செல்வம்) விளைவதற்காக ஆடிய ஆடல்.

விநாயகரும் முருகனும் மாங்கனிப் போட்டி மூலம் அண்டசராசரங்களும் அம்மை அப்பரே என்ற ஞானத்தைப் புகட்டினர். ஔவைக்குச் சுட்டகனி, சுடாதகனி காட்டிக் கண் திறந்தான் முருகன் என்ற பாலகன். இக்கதைகளுள்ளே புதைந்துள்ள உண்மைகள உணர்தற்குரியவை.

''உள்ள பொருள் ஒன்றே. ஞானிகள் அதனைப் பல நாமங்களால் அழைப்பர்.'' ''ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ'' என்ற பேருண்மைகளை வெளிப்படுத்தும் வகையிலே சிவபெருமானின் மூர்த்தங்களை இளமை நலங்கனிந்த கடவுளராய்'க் கண்டவர்களை வாழ்த்தி அவர்கள் வழி நின்று அவர்களை வணங்கி உய்வோம்.

# கல்வியங்காடு ஸ்ரீ வீரபத்திரஸ்வாமி கீர்த்தனைகள்

'இயலிசைவாரிதி' 'ஸாஹித்ய ஸாகரம்'
யாழ்ப்பாணம், இணுவில்
பிரம்ஶ்ரீ ந. வீரமணிஐயர்

## பிரமனகந்தை தொலைத்த தீரன்

ராகம் : கரகரப்ரிய — தாளம் : ரூபகம்

பல்லவி

வீரபத்ரர் பாதபத்மம்
வேண்டித் துதிப்போமே

அனுபல்லவி

சாரவேதம் சந்ததம் புகழும்
கோலரூபன் கல்வியங்காட்டு

சரணம்

பிரமனகந்தை தொலைத்த தீரன்
அரனவன் சுதன் அங்கைச் சூலன்
வரமருளியே வாழ்வு தருபவன
சரணமலரைச் சந்ததம் பணிவோம்.

## திரிசூலமேந்திடும் தீன தயாபரன்

ராகம் : ஷண்முகப்ரிய — தாளம் : ஆதி

பல்லவி

திரிசூலமேந்திடும் தீன தயாபரன்
விரிமாமலர்ப்பதமே வியனுலகில் துணையே

அனுபல்லவி

அரிமாயனின் மருகன் அம்பலவன் மைந்தன்
தருவானே நல்லருள் தாளைப் பிடித்திடுவோம்

சரணம்

சிவமூர்த்தம் கொண்டிடும் சின்மயா நந்தமூர்த்தி
பவநாச காரணன் வீரபத்திர மூர்த்தி
நவமான அருள் நல்கி நம்மையே காப்பவன்
கவினார் தலமான கல்வியங் காடுவளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்ததம் வீரபத்திரனைச் சரணடை

ராகம் : காபி தாளம் : ஆதி

பல்லவி

சந்ததமும் வீரபத்ர ஸ்வாமியை சரணடைவாய்
வந்தவினை தீர்த்துவைப்பான் வாழ்வினிலே — மனமே

அனுபல்லவி

முந்தி அயனார் அகந்தை
முடித்த வீரபத்ரன்
உந்தனுக் கருள் தருவான்
உயர்ந்த வாழ்வும் அருள்வான்

சரணம்

கல்வியங்காட்டுத்தலக் கோயில் கொண்ட கீர்த்தி
நல்வரங்கள் தான் தருவான் நல்வீரபத்ரமூர்த்தி
வல்லமைகள் தானருள்வான் வாழ்வில் கலவி செல்வம் வீரம்
எல்லாமே தந்தருள்வான் எம் பெருமான் வீரபத்ரர்.

# மங்களம் பாடிடுவோம்

ராகம் : சுருட்டி தாளம் : ரூபகம்

பல்லவி

மங்களம் பாடிடுவோம் - எங்கள்
சங்கரனார் மைந்தன்
வீரபத்ர ஸ்வாமிக்கு

அனுபல்லவி

பங்கஜப் பாதவருள்
பரிந்தருள் தருபவர்க்கு
அங்கையிலே தீரி
சூலப்படை ஏந்துவோர்க்கு

சரணம்

செம்மேனிச் செல்வருக்கு
சேந்தனவன் சோதரர்க்கு
நம்மாதவத் தலக்
கல்விக்காடு வாசருக்கு
பெம்மானும் வீரபத்திரப்
பெருமானுக்கும் பக்தர்
இம்மாநில அடியர்
எல்லோருக்கும் மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் பயனும்

வே. ஞானகாந்தன் B. A.
அதிபர்
கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை

உலக சுகங்களை நாடிச் செல்லும் மனத்தை அப்படிச் செல்லாமல் இழுத்துப் பிடித்துத் தெய்வத்தை நோக்கிச் செலுத்தினால் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவும், பரிபக்குவமுடையதாகவும், தெய்வீகம் நிறைந்ததாகவும், பேரின்ப அனுபவம் நிறைந்ததாகவும் மாறிவிடுகின்றது. யாக்கையே நிலையற்றபொழுது யாக்கையின் சம்பந்தமாக அனுபவிக்கும் சுகங்கள்தான் எவ்வாறு நிலையானதாக அமையமுடியும். ஆகையால் அநித்திய வஸ்துக்களில் பற்று வைப்பதில் ஒரு சுகமுமில்லை. கடைசியில் எல்லாம் சஞ்சலத்தையே வருவிக்கின்றன. நித்தியாநித்திய விவேகமொன்றே மனிதனைச் சஞ்சலத்தில் இருந்து மீட்கக்கூடும். நித்தியானந்த வஸ்துவாகிய இறை எம்முடன் என்றும் கூடி நிற்கின்றது. அது நம்மை ஒருகாலத்திலும் விட்டுப் பிரியாதது. அதை உணர்வதே வாழ்வில் உயிர்பெறும் பேறு. அதைப் பூசிப்பதே பேரின்பம். அதில் சொக்குவதே இறவா இன்பமாகும்.

எல்லாவற்றையும் கடந்து எல்லையற்றதாய் இருக்கின்ற தன்மையால் பரம்பொருளை கடவுள் என்று போற்றுகின்றோம். எல்லா உள்ளங்களையும் உயிர்களையும் செலுத்துவதனாலும் கடவுள் என்ற பெயரும் எழுகின்றது. ஆகையால் நாம் வணங்கும் கடவுள் எல்லாவற்றையும் கடந்து எல்லாவற்றுள் கலந்தும் நிற்கின்றார். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் நிலையே சிவபெருமானின் சொரூப நிலையாகும். மனிதனின் உடலை எம்கண்முன் வைத்து நோக்கினால் அதனுள் உயிர்நின்று அதனை இயக்குகின்றது என்ற உண்மை புலனாகும். அந்த உயிரை நாம் கண்ணாற் காண்பதில்லை காணக்கூடிய உடலைக்கொண்டே அதனை இயக்குகிற உயிர் இருக்கின்றது என்று உணருகிறோம். உடலின் தொடர்பை விட்டு உயிரை உணரமுடியாதது போன்று உடலாகிய இயற்கைமூலம் உயிராகிய கடவுளை உணர்ந்து தலைப்படுகின்றோம். உலக உயிர்கள் வழிபாடு செய்து உய்யும் பொருட்டே இயற்கையுடன் இறைவன் கலந்திருக்கின்றான். அலையும் உள்ளத்திற்கு அது பற்றிப் பிடிப்பதற்கு ஒரு ஆதாரம் தேவை. மனமானது உருவம் ஒன்றை உணர்வதற்கு உருவத்துணை ஒன்று தேவைப்படுகிறது.

கடவுள் ஒருவரே நித்திய வஸ்து. நாம் வேறு கடவுள் வேறு எனும் எண்ணம் நமக்கொரு காலத்திலும் இருக்கக்கூடாது. நம்முடையதென்று ஒன்றையும் வைத்திருக்கவும் முடியாது. நமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அவரிடத்தே ஒப்படைத்துவிட வேண்டும். நான் என்ற எண்ண நினைவு தலைப்படலாகாது. எல்லாம் அவருடையதாய் விட்டுவிடவேண்டும் தனம், தானியம், பூமி முதலிய சகல சம்பத்தும் அவரால் எமக்கு அளிக்கப்பட்டவை. எல்லாம் அவருடையவை எமக்கென்று இவ்வுலகில் எம்மை விட்டுப் பிரியாது வழிகாட்டியாக என்றும் விளங்குவது கடவுள் ஒருவரே. எல்லாம் சிவன் செயல். உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம். எதைக் கடவுள் எமக்குக் கொடுக்கின்றாரோ அதை நாம் சந்தோஷமாக ஏற்று வெற்றிகரமான வாழ்க்கையை ஓட்டவேண்டியது எமது கடனாகும்.

குளிரும் காற்றும், மின்சாரமும் கண்ணுக்குப் புலப்படாத இடத்தும் அவை இருக்கின்றனவன்றோ. புஸ்பத்தின் வாசனை கண்களுக்குப் புலப்படாவிட்டாலும் இருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன அன்றோ? உலகில் உள்ள எப்பொருட்களும் ஐம்புலன்களில் ஒன்றாலேனும் அறியப்படக் கூடியனவாக உள்ளன. கடவுள் இவற்றை எல்லாம் சிருஷ்டித்து இவற்றிற்கு மேல்நிற்பவர். ஆதலால் அவர் நமது இந்திரியங்களுக்கு அடங்கிப் புலப்படார். அதுவே அவருடைய அருவத் தன்மையாகும்.

மக்களாகப் பிறந்த நாங்களே பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க முடியும். ஏனைய உயிர்களுக்கு இப்பிறவியில் முத்தி இன்பம் பெறுவதன் பொருட்டேயாகும் என்பது நாவலர் வாக்கு. இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்கள் பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க முடியும். ''செல்வன் கழுவேந்தும் செல்வம் செல்வமே'' என்று சம்பந்தப் பெருமான் அருள் பொதியக் காட்டுவார்.

மக்களின் வாழ்க்கைக்கு உடம்பிலுள்ள உறுப்புக்கள் எல்லாமே பயன்படுகின்றன. அவை ஒத்த சிறப்பையோ மதிப்பையோ பெறுவதில்லை. மனிதரின் உடலிலுள்ள உறுப்புக்களில் தலையே முக்கியமானது. ஆனால் உடம்பிலுள்ள ஏனைய உறுப்புக்களில் ஒன்றாகிய கால் தலைபோல அவ்வளவு சிறப்பைப் பெறுவதில்லை. தங்களின் தன்மைக்காக மற்றவரின் கால்கை பிடிப்போர் பலர். காலால் இட்டதைத் தலையாலே செய்யும் மனிதர் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். கால் என்பது ஆன்மீக வாழ்வின் வழி. தலை என்பது ஆன்மீக வாழ்வின் பயன். காலும் தலையும் வெறும் உறுப்புக்கள் அல்ல. அவை வாழ்வின் வழியும் பயனும் என்பதை உணர்ந்தவர்கள் சிவமாகவே விளங்குவர். இறைவன் தமது திருவடியை அடியார் முடியில் சூட்டுவதே அவன் திருவருள் பாலிக்கும் அருட்செயலாக அமைகின்றது.

ஆன்மா தன் செயலற்று நான் எனது என்னும் செருக்குமற்று இறைவன் திருவடி நிழலையே சார்பாகச் சென்றடையும்போது திருவருட் சக்தியோடு ஆன்மா நிற்கும் நிலை ''திருவடி'' எனவும் எல்லாம் சிவமாய்க் காண்டல் ''திருமுகம்'' எனவும் அந்நிலையில் அடையும் பரம சுகமே ''திருமுடி'' எனவும் கொள்வர். சச்சிதானந்த சொருபியாகிய பரமசிவத்தை ஆன்மா சேர்ந்து கொள்ளும் நிலையைக் கொடுக்கின்றவரும் சிவமே. ஏற்கின்றவரும் சிவமே. எல்லாஞ் சிவமே என்று மிக உயர்ந்த நிலையில் வைத்துப் பேசப்படுகின்றது. இதுவே உயிர்களின் வாழ்வியல் குறிக்கோளாகவும் பயனாகவும் அமைந்து விடுகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரூரும் வீரபத்திரர்

க. சி. குலரத்தினம்

உலகத்துக்குக் கருத்தாவும் முழுமுதற் கடவுளும் சிவபெருமானே யாவர். அவரின் பரத்துவத்தையும் வியாபகத்தையும் வேதங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், புராணங்கள் திருமுறைகள் யாவும் எடுத்தியம்புகின்றன. உமாதேவியாரும் திருமாலும் சிவபெருமானின் இருவேறு சக்திகள். விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், வீரபத்திரர் ஆகிய சிவமூர்த்தங்கள் சிவபரத்துவத்தைக் குறிப்பன. விநாயகர் ஒலி வடிவாயும், சுப்பிரமணியர் ஒளி வடிவாயும் உள்ளவர்கள். பைரவரும் வீரபத்திரரும் பரத்துவத்தைக் குறிக்கும் திருப் பெரு வடிவங்கள். ஆதலில் இவர்கள் சிவபெருமானின் திருவருட் சக்திகளே யாவர்.

சிவபெருமானை நினைக்காமல் யாகஞ் செய்தவன் தக்கன். யாகாதிபதி, மகபதி என்றெல்லாம் வேதங்கள் ஐயா எனப்போற்றும் சிவனுக்கே வேள்வியில் அவிப்பாகம் உரியது. அறியாமையும் அகந்தையும் கொண்டவர்களுக்குத் தண்டனையும் திருவருளும் கொடுத்து ஆட்கொள்பவர் சிவபெருமான் என்பதை வேதாகமங்கள், புராணேதிகாசங்களில், மாத்திரமன்றி, நாளாந்த நடைமுறையில் நிகழும் பூசை, விழா என்பனவற்றிலும் நன்கறிய உள்ளவை எங்கள் திருக்கோயில் நிகழ்ச்சிகள். எங்கும் பரந்து வியாபித்துள்ள இறைவனைக் குறிப்பாக ஓரிடத்தே காண உள்ள இடம் திருக்கோயில். இங்ஙனமாகத் தலைவனாக இறைவனைக் காணும் இல்லம் கோயில். நாமெல்லோமும் இறைவனாகிய தந்தையின் பிள்ளைகள். நாங்கள் லயப்படும் இடமே ஆலயம். நாங்கள் ஆன்மாக்கள், பசுக்கள், இறைவன் தலைவனாய பசுபதி.

இறைவனை நாம் காண்பதும் அவர் எம்மைக் காண்பதற்கு வருவதும் திருவிழாக்களின் நோக்கம். எனினும் திருவிழாக்களின் தத்துவம் என்று ஒன்றுண்டு. தத்துவம் என்றால் உண்மைப் பொருள். உண்மைப் பொருள் என்றால் என்றும் நீங்காதது. என்றும் உள்ளதைக் கூறும் அளவை என்னும் தாக்கத்துக்குப் பெயர், சற்காரியவாதம்.

திருவிழாக்களில் இறைவன் எம்மைக் காண்பதற்கு வெளியே வருகிறார். வந்து அருள் புரிகிறார். நாங்கள் சேவித்தும் பாடியும் வணங்கியும் பணிகிறோம். ஆராமை மிகுந்தால் ஆடுவோம். அவரே எம்மை ஆட்டுபவர் ஊட்டி வளர்ப்பவர். இறைவன் தாமே திருநீறு பூசுபவர். அவர் வெண்ணீற்றர். எனவே அவரின் அடையாளமாய சிவசின்னத்தை, அஃதாவது திருநீற்றை மறத்தலாகாது.

சிவபெருமான் எங்களிடமுள்ள மிருகக் குணத்தைப் போக்குகிறார் வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அவர். அவர் வேகம் கெடுத்து ஆள்பவர் என்பதால் அவர் இடபம், குதிரை ஆனை முதலியவற்றில் எழுந்தருளும் அழகைப் பார்க்கலாம், பணியலாம், பணிந்து அவரைச் சுமக்கலாம், காவலாம், கொடி, குடை, விளக்கு பிடிக்கலாம். பிரார்த்தனை செய்யலாம். எம் வழிபாடுகளை அவர் அறிவார். நாம் செய்யும் சேவைகள் வரிநெடும் புத்தகம் என்னும் பதிவேட்டில் பதியப்படும். அவற்றுக்குத் தக்கபயன் கட்டாயம் கிடைக்கும். அதோ தேர் உருண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டோடி வருகிறது. தேர் அவருக்குரிய ஊர்தி தேர். என்றால் அதில் எல்லாத் தத்துவங்களும் அடங்கும். அதில் எங்கள் ஊர், நாடு, உலகம், அகிலம், புவனம், அண்டம், பரவெளி எல்லாம் உள்ளன. பெருங்கடல்களும் உள்ளன. வாழை, கரும்பு, கமுகு, தென்னை, பனை, மா, பலா முதலியன மாத்திரமல்ல, கடல், சூரியன், சந்திரன் முதலான மூர்த்தங்களும் உள்ளன. இறைவனின் வியாபகத்தைக் குறிக்கவே உலகத்து விளை பொருள்கள் யாவும் தேரில் தொங்குகின்றன. இடம் பெறுகின்றன.

தேரைப்பார்த்து இறைவனின் அழகையும் அருட்பெரும் திருவடியையும் பணிவதற்கு நீங்களும், நாங்களும் மாத்திரமா வந்தோம். தேவாதி தேவர்கள், சித்தர், கிம்புருடர், ஆகாச வாசிகள், கந்தர்வர், வித்தியாதரர் முதலாய எல்லோரும் வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்திருப்பதை எங்கள் ஊனக் கண்ணாற் காணமுடியாது. திருவிசைப்பா என்னும் திருமுறையில் 'ஆரார் வந்தார்' என்று ஓர் அருமையான அருளிப்பாடு கண்டு அதை உடனடியாகப் படித்து உருகலாம். தேவர்களில் பெரும் பதவிகளில் உள்ளவர்கள் திருமால், பிரமன் இந்திரன் அவர்களும் கீழே இறங்கி வந்து பூலோகத்தில் கும்பாபிஷேகம், தேர் முதலிய விழாக்களைக் கண்டு பயன் பெறுகிறார்கள்.

சிவபெருமானுக்கு உள்ள பொருள், உடைமைப் பொருள் என்பன நிறைய உள்ளன· உள்ள பொருள்களுள் மிகச் சிறந்தது அவரின் கருணைக் குணம், உடைமைப் பொருள்களுள் மிகவுயர்ந்தது ஆன்மா ஆன்மாக்களின் தொகை அறிய முடியாது. ஆனால ஆன்மாக்களின் தலைவன், ஆன்ம நாயகன் எனவுள்ளவர் இறைவன்

இறைவன் உள்ள பொருளோடும் உடைமைப் பொருளோடும் எழுந்தருளும் பெருந் திருவிழா தேர்த் திருவிழா. திருக்கோயில் திருவிழாக்கள் இறைவன் ஆன்மாக்களுக்காகச் செய்தருளும் ஐந்தொழில்கள் எனப்படும். பஞ்ச கிருத்தியங்களைக் குறிப்பன. கொடியேற்றம் முதல் கொடியிறக்கம் வரையுள்ள விழாக்கள் எல்லாம் இறைவன் ஆன்மாக்களுக்காகச் செய்தருளும் ஐந்தொழில்களைக் குறிப்பனவாதும். இவற்றுள் தேர்த்திருவிழா அழித்தல் என்னும் விளையாட்டைக் குறிப்பதாகும். அதன் இரகசியம் உடற்பற்றை விடுதல் என்பதாம். உடற்பற்றை விட்ட பின்பே திருவருள் கிடைக்கும். திருவருளே தீர்த்தம். தீர்த்தம் சென்றாடு தீர்த்தமாய சிவனை அடைதல் என்பதேயாம். சிவகதி பெறுதலே பிறவி எடுத்ததன் பயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்த் திருவிழாவும் சம்கார மூர்த்திகளும்

நியாய சிரோண்மணி கி. சுப்பிரமணியசாஸ்திரிகள்

கல்வி இயங்கும் காடு என்று அழைக்கப்படும் யாழ்ப்பாணத்து வடபால் அமைந்த கிராமத்தில் தேர்த் திருப்பணி நடைபெற்று ஸ்ரீ வீரபத்திர சுவாமிக்கு தேர் உற்சவம் நடக்கப் போவதைக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

1. வேதத்தில் ரதம் சூரியனின் தேரை ஏழு குதிரைகளுடனும் ஒரு சில்லுடனும் கூடியதாகக் கூறப்பட்டுள்ளது. "சப்தாசுவம் ரதமேக சக்ரம்" இதுவே வேத வாக்கியம்.

2, குமாரதந்திரத்தில் முருகன் ஆகமம். குமாரதந்திரம் அதில் 2, 3, 4, 5, 6, 7, 8 என்ற எண்ணிக்கையில் சில்லுகள் கொண்டதாக பலவிதமான பெயர்கள் கொண்ட தேர்கள் வர்ணிக்கப்படுகின்றன.

3. கீதையில் கண் முதலான இந்திரியங்கள் குதிரைகள் என்றும் ரூபம், ரசம் முதலான குணங்கள் இக்குதிரை நம்மை இழுத்துச் செல்லும் இடங்கள் என்றும் புத்தியே சாரதி என்றும் மனமே கடிவாளம் என்றும் ஆன்மாக்களே அதில் ஏறிச் செல்பவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது'

4. சிற்பசாஸ்திரங்களில் சித்தூர் மட்டம் பேரூர் மட்டம் நாராசனம் சிங்காசனம், கந்தர்வர்கள் யாளிகள். அந்தக் கோவிலின் வரலாறுகள் இவைகளெல்லாம் அமைக்கப்படுவதோடு 2 குதிரைகள் 3 குதிரைகள் 4 குதிரைகள் என்று முற்புறம் பிரமன் சாரதியாக தேரை ஓட்டுவதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த தேர்த் திருவிழா என்பது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்கள் நடு நாயகமான அழிக்கும் தொழிலையே குறிப்பிடுவதாகும்.

இந்தத் தேரில் அலங்கார அல்லது கொடியேற்ற திருவிழாக்களில் ஐந்து முக விநாயகர், ஷண்முகர், நடேசர் முதலான சம்கார மூர்த்திகளை தேர்விழா அன்று தேரில் ஏற்றிப் பவனி வருவார்கள். இப்படிப்பட்ட தேர்த்திருவிழா இல்லாத தனிப்பட்ட முறையில் இழுக்கக் கூடாது. சிற்சில கோவில்களில் பழனி. இராமேஸ்வரம் முதலான இடங்களில் தங்கத்தினாலும் வெள்ளியினாலும் சிறிய ரதமாக அமைத்து கோவில் திருப்பணி முன்னேற்றத்திற்காக காலையில் ரூபா ஆயிரம் கட்டினால் மாலையில் இந்த ரதம் இழுக்கப்படும். இதில் ஆலய வரலாறோ குதிரைகளோ கந்தர்வர்களோ ஒன்றும் இருக்காது. இது சாதாரண கோவில் உழைப்பை முன்னிட்டுச் செய்வதாகும். எக்காரணம் கொண்டும் நடேசர் இப்படிப்பட்ட ரதத்திலும் திருவிழாக்காலங்களில் தவிர சாதாரண நாட்களில் இழுக்கப்படுவதில்லை. இதை வெள்ளிரதம் என்பர். இதைத்தவிர சிதம்பரத்திலே தேர்த்திருவிழா தனிப்பட்டதாகும்.

தேர்த்திருவிழாவின் பலன் மக்களிடையேயுள்ள இராட்சத குணங்களை நீக்கி மோட்சத்தை அளிப்பதாகும். புதிதாகக் கல்யாணம் ஆன தம்பதிகள் முதலாவது ஆண்டில் தேரைப் பார்க்கக்கூடாது என்பது ஓர் ஐதிகம். ஏனென்றால் இகலோக வாழ்க்கைக்காகத் திருமணம் செய்து கொண்டு ஓராண்டு முடிவதற்குள் பரலோக வாழ்க்கையாக அமையும் மோட்சத்தை நாடுவது சரியல்ல என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் படிப்பிற்காக இலங்கையில் பிள்ளையார் கோவில்களிலும் நடேசர் வைத்து வழிபடுகிறார்கள். இது இந்த தேசவழமையாக உள்ளது. இங்கும் ஆனி உத்தரம் மார்கழித் திருவாதிரை ஆகிய இந்த இரண்டு நாட்களிலும் நடேசரை மஞ்சத்தில் கேடயத்தில் வைத்து வீதி உலா அன்று மாத்திரம் வரலாம். அபிஷேகம் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்ட வருடத்தில் ஆறு நாட்களில் மட்டுமே நடேசருக்கு அபிஷேகம் செய்யவேண்டும். மற்றச் சுவாமிகளுக்குப் போல் தினமும் செய்ய ஆகமம் இடமளிக்கவில்லை.

விவாகம், நடேசர் கும்பாபிஷேகம் செய்த தினத்தன்று நடேசருக்கும் சிவகாமி அம்மைக்கும் திருக்கல்யாணம் செய்ய வேண்டுமென்று சாரணாகமத்தில் நிருத்த மூர்த்தவிதிப் படலத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் கல்யாண சுந்தரர் என்று அழைக்கப்படும் இந்த நடேசருக்கு உலக சிருஷ்டிப்புக்காக திருக்கல்யாணம் செய்கிறேன் என்று குருக்கள் சங்கல்பம் செய்வதுடன் தோத்திரத்திலும் குறிப்பிட வேண்டும்.

இவ்விஷயத்தை நாம் எழுதுவது நடேசருக்கு கல்யாணம் உண்டா என்று பலர் கேட்கிறார்கள். அவர்களின் சந்தேகத்தை இதன்மூலம் தெளிவுபடுத்தவே நாம் இவ்விசயத்தை இங்கு விசேடமாகக் குறிப்பிட்டோம். பல சந்தேகங்களை நிவர்த்தி செய்ய இக் கட்டுரையை எழுதுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேரோடும் திருக்காட்சி நாம் காணும் அருட்காட்சி

சொல்லிசைச் செல்வர் திரு. க. ஆனந்தராசா, ஆசிரியர்
அன்னைதாசன்

கல்வியம்பதி யுறை நாயகரே
வல்லவரே வீர பத்திரரே

கொல்லுங் கொடியவரால் வாடுகின்றோம்
அல்லும் பகலுமுனைப் பாடுகின்றோம்
தொல்லை வினைகளையே தீர்த்திடவே
எல்லையிற் கருணையைத் தந்தருளே.

கல்வியம்பதி

கள்ளங் கபடமிங்கே மலியுதப்பா
உள்ளம் எவரிடமும் இல்லையப்பா
வெள்ளை உள்ளங்கொண்டு வாழ்ந்திடவே
கொள்ளை அருளைத்தந்து ஆளுமப்பா

கல்வியம்பதி ...

மா பலா வாழைப்பழ மனைத்தும்
ஆவலாய் உன்முன் நாம் படைத்தோம்
மேவிடுந் துன்பங்கள் யாவையுமே
தாவியே ஓடச் செய்யுமையா.

கல்வியம்பதி

நீராடுந் திருக் குளத்துடனே
தேரோடத் திரு வுளமிசைந்தாய்
யாரோடும் பகை கொள்ளாமலே
போராடும் நிலை மாற்றிடப்பா

கல்வியம்பதி...

## நீயிரங்காவிடில் யாரிடம் நவில்வோம்

வீரபத்திர தேவா ஆதி நாயகர் பாலா
யாருடன் நம்துயர் நவின்றிடுவோமையா
நீயிரங்கி யருள் தா தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி யம்பதி மேவி
வல் வினைகளைத் தீர்க்கும்
நல் லருள் புரிந்திடும் நம்வீரபத்திரர்
ஒல் லையில் எம்முன்னே வா வா

வீரபத்திர...

முக்கண்ணன் சினம் தீர
தக்கனின் சிரம் தீர்த்தாய்
நித்தமும் நின்னருள் பெற்றுமகிழ்ந்திட
அத்தனே ஆரமுதே வா

வீரபத்திர...

நாளிலும் பொழுதிலும் இங்கே
நாம் தேடும் அமைதி தான் எங்கே
பாம்டணி மார்டனின் பணி செய்த வீரனே
நாம் படும் வேதனை தீராய்.

வீரபத்திர...

பரிவாரம் புடை சூழ
வருவாய் எம்பிணி மாற
குருவாய் வந்த எம் குமரனின் சோதரா
தருவாய் உனதின் னருளே.

வீரபத்திர...

தேரோடுந் திருக் காட்சி
நாங் காணும் அருள் மாட்சி
நீங்காமல் உன் நினைவுடன் நாம் வாழ
பாங்காய் அருள் எம் பரனே.

வீரபத்திர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்!

வீரபத்திரப் பெருமானின் திருவருளுக்கு எமது பிரார்த்தனைகள். அருள்பொழியும் மூர்த்தியாம் வீரபத்திரப் பெருமானுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா 21.04.94 வியாழன் காலை மிகச் சிறப்புற நடைபெற பலவழிகளிலும் நின்றுதவிய அன்பர்கள் அடியார்கள் அனைவருக்கும் தனித்தனியே நன்றி நவிலல் அசாத்தியமானதாகும் என்பதால் நினைவில் இருந்து சில நிகழ்வுகளைக் எடுத்துக்கூறி நன்றி நவில்கின்றோம்.

சித்திரத் தேர் நிர்மாணிக்க பெருநிதியையும் பொருளுதவியையும் சரீர உதவிகளையும் கேட்டபோதெல்லாம் வேண்டியவாறு வழங்கிய உள்ளங்களுக்கு நன்றி கூறுகின்றோம். உயர்ந்த உணர்வோடு சிறந்த பண்போடு உழைத்த உள்நாட்டு வெளிநாட்டு அத்தனை அடியார்களுக்கும் அன்பர்களுக்கும் எமது உளம் மகிழ்ந்த நன்றிகள் உரித்தாகுக. பத்திரிகைச் சிறப்பு மலருக்கு ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கிய வணக்கத்திற்குரிய சமயப் பெரியார்களுக்கும் வெள்ளோட்ட விழாவில் கலந்து கொண்டு ஆசியுரைகளும் சிறப்புக்கருத்துக்களும் வழங்கிய அறிஞர்களுக்கும் எமது நன்றிகள். வெள்ளோட்ட விழா சிறப்புற விசேட ஒழுங்குகளைச் செய்து சிறப்பித்த அன்பர்களுக்கும் எமது நன்றிகள். வெள்ளோட்ட விழா மலர் நறுமணம் வீச ஆசியுரைகளையும் கட்டுரைகளையும் வாழ்த்துரைகளையும் பாமாலைகளையும் காலத்தோடு தந்துதவிச் சால்புறச்செய்த அறிஞர் பெருமக்களுக்கும் இம்மலர் வாடா மலராக ஆண்டாண்டு திகழ அரவணைப்பு நல்கிய அறங்காவல் சபையினருக்கும் ஆலயக்குரு பிரம்ஸ்ரீ பொ. வரதராசக் குருக்கள் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

தேர்க் கொட்டகை அமைக்கும் பணிக்கு பனைமரங்களும் பொருட்களும் உதவிய அன்பர்களுக்கும் மரங்கள் ஏற்றிஇறக்க தமது மாட்டுவண்டியை உதவிய தம்பி பொ. பரமேஸ்வரன் அவர்களுக்கும் தமது லாண்மாஸ்ரரை எமது பல்வகைத் தேவைகளுக்கும் வேண்டும் போது தந்துதவிய தம்பி நா. ஜெயம் அவர்களுக்கும் இப் பணிக்கு தமது சரீரத் தொண்டுகளைச் செய்த அன்பு உள்ளங்களுக்கும் விசேடமாக கோப்பாய் பிரதேசசபை ஊழியர்களுக்கும் (சிரம தானம்) நன்றியும் கடமையும் உடையோம். எமது மக்களின் உள்ளங்களில் பெருமகிழ்ச்சி பொங்க சித்திரத் தேரினை ஆக்கிப்படைத்த ஸ்தபதியார் சீவரத்தினம் ஐயா அவர்களுக்கும், அவர்தம் ஈடிணையற்ற கலைஞர்களுக்கும் எமது மாறாத நன்றிகள்.

திரைகடலோடியும் திரவியம் தேட முயன்ற எமது சகோதர அன்பர்கள் எமது சமயத்தையும் சமய ஆசார சீலங்களையும் பேணிப் பாதுகாத்து எமது 'வேண்டுகோளுக்கிணங்க பெருநிதி வழங்கியமை எமது மக்கள் என்றென்றும் பாராட்டுவார்கள். எமது இம் மலர் வாடாமலராக வடிவமைப்புப் பெற விளம்பரம் தந்துதவிய அன்பர்களுக்கும் மலர் வெளியீட்டு நிகழ்வின் போது பலவகைகளிலும் பங்குகொண்டுழைத்த அன்பர்களுக்கும் இம் மலரை வடிவமைப்புச் செய்வதில் எமக்கு உறுதுணை புரிந்த அன்பர்கள் திரு. சோ. பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும் திரு. கோ. சிவசுந்தரமூர்த்தி அவர்களுக்கும் நாம் நன்றியும் கடமையும் உடையோம். இம் மலர் மணங்கமழும் நறுமலராய் மலர்ந்து குலுங்க தோன்றாத்துணையாய் நின்றுழைத்த அத்தனை அன்பு உள்ளங்களைகும் இம் மலரை இறைவனின் அர்ச்சனை மலராக தம் கரங்களில் ஏந்தி எம்மை ஊக்குவித்த எல்லா உள்ளங்களுக்கும் எம் அன்புகனிந்த நன்றிகள்.

இம்மலரை சிறப்புற அழகாக அச்சிட்டு உரியகாலத்தில் எம் கரங்களில் தவழச் செய்த முல்லை அச்சகத்தினர்க்கும் எமது நன்றிகள்.

சி. கந்தையா ஆசிரியர்
செயலாளர்

தேர்த் திருப்பணிச் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திர காளியுடன் பக்கத்தே நீயமர்ந்து
வித்தகம் நீ காட்டுவாய் – தெய்வ
சொத்துனை நாம் பாடுவோம்.

# த. வரதராசன்

இராச வீதி, கல்வியங்காடு.

---

வீரபத்திர சுவாமியை சரணடைவாய்
வந்தவினை தீர்த்து வைப்பான்.

# தி. ரவிச்சந்திரன்

இராச வீதி, கல்வியங்காடு

---

தக்கன் தலையறுத்து தன்முனைப்பை
ஒடித்து மிக்கதோர் செயல் தந்தவா – வீர
பத்திரா எனை வென்றவா.

# நியூ சுபமாலா மோட்டர்ஸ்

மோட்டார் உதிரிப்பாக விற்பனையாளர்

79, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வீரபத்திரப் பெருமானுடைய
சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சிகள்
இனிது நிறைவுற
வாழ்த்துகின்றோம்.

# லக்சுமி கொமினிகேசன்

118, டாம் வீதி, கொழும்பு 12.

சர்வதேச தொலைத் தொடர்புகளும், (f)பக்ஸ் சேவையும்
போட்டோ பிரதிகளும்

| | | |
|---|---|---|
| 327131, | 433479, | 437578 (f)பக்ஸ், |
| 336951, | 336952, | 336953 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியாகித் தெய்வமென கும்பிடுவோர் நெஞ்சமதில்
நிலையாகி நின்றிருக்கும் கள்ளியூர்ப் பெருவள்ளல்.

# டனிஷா கதிரைகள்

வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்

விளையாட்டு அரங்க வீதி, கல்வியங்காடு.

கல்வியங்காடமர்ந்து வல்வினை தனைக் களைந்து
எல்லையில் அருள் கூட்டினாய் - பக்தர்
தொல்லைகள் நீ மாற்றினாய்.

# யசோப் பந்தல் மணவறைகள்

வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்

G. P. S. றோட், கல்வியங்காடு.

அறிவாகி உலகெல்லாம் ஆக்கி அழித்து நிற்கும்
நெறியாக வீரபத்திரா நின்னடியைச் சூடுகின்றேன்.

# பன்னீர்ச்செல்வம் மரக்காலை

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பர மூர்த்தியாம் வீரபத்திரா
செப்பும் நின்றன் திருவடியில்
பற்று வைத்து எம்மீது
பகரும் திருவருள் புரிவாயே !

# லக்ஷமி ஸ்ரோர்ஸ்

பல்பொருள் விற்பனையாளர்கள்

பலாலி வீதி, திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வீரபத்திரர் பதம் தொழுவோர்க்கு
எல்லாச் சிறப்பும் எய்திடும் இனிதே !

ஜயகீதா
இயந்திர உதிரிப்பாக வாணிபம்
245, அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

தக்கன் வேள்வியை பொடி செய்த வீரபத்திரரே
அற்புதத் தொண்டரை ஆளுமையா !

பொ. தம்பிராசா
புலவனார் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தேம்பியழும் எம்மினத்தை
தேற்றி வழிகாட்ட வேண்டுகிறோம்.

முல்லை அச்சகம்
தரமான அச்சுவேலைகளுக்கு நம்பிக்கையான இடம்
ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(புனித சவேரியார் ஆலயம் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நடைபெறும்
சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா
இனிது நடைபெறவும் அனைத்து மக்களும்
ஶ்ரீ வீரபத்திரரின் அருளால்
சமாதானமும் பேரருளும் கிடைத்திடவும்
பிரார்த்திக்கிறோம்.

# ஆ. க. சின்னத்தம்பி

பொது வர்த்தகரும் சேவையாளரும்
110 / B1 ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.
தொலை பேசி : 330933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைக் கடல் ஸ்ரீ வீரபத்திரர்
தேர்த் திருவிழா மஹோற்சவ நன்னாளில்
அடியார்கள் அல்லல் அகற்றி
அருள்பாலிக்கப் பிரார்த்திக்கிறோம்.

# எஸ். பீ. எஸ்.

போக்குவரத்து சேவையாளரும்
பொது வர்த்தகர்களும்
118, டாம் வீதி, கொழும்பு 12.
தொலை பேசி : 327131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கப் போராட்ட வறுமைப் பிணியகன்று
வெற்றியே மலர்ந்திட வரந்தர வேண்டுமையா
சர்க்கரைப் பாகான சைவத்தமிழ் நெறி வாழச்
சித்திரத் தேரூரும் வீரபத்திரன் நீயன்றோ.

# மணியம் வர்த்தக நிலையம்

## உணவுப் பொருட்கள் மொத்த சில்லறை விற்பனையாளர்

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா ஆசிரியா
உரும்பிராய்

சிற்பம் நிறைந்த திருத்தேரில்
சிறப்பாய்நின் திருக்கோலம்
அற்புதத் தோடும் கண்டிறைஞ்ச
அடியார் கூட்டம் கூடிநின்றார் . . .

அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா ஆசிரியா
உரும்பிராய்

# சு. பாலகுமாரன்

28/33, மணல்தறை லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 NOV 2018
2124
9 DEC 2018
2124

அல்லல் நீங்கவும் அமைதி தோன்றவும்
கள்ளியூர் ஸ்ரீ வீரபத்திரர்
சித்திரத் தேர் விழாக்காண்போம்.

# ஈஸ்வரன் சகோதரர்கள்

61, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

பொதி சுமக்கும் வாகன சேவையாளர்களும் உணவுப்
பொருட்கள் மொத்த விற்பனையாளர்களும்

கண்டி றோட், கிளிநொச்சி
148, கண்டி றோட், வவுனியா
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. ஆனந்தராஜா.

அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா ஆசிரியர்
உரும்பராய்

அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர்

தேவஸ்தான

# சித்திரத் தேர்
# வெள்ளோட்டம்

## இனிதே சிறப்புற வாழ்த்துகிறோம்!

அன்னைதாசன்
திரு. க. ஆனந்தராசா ஆசிரியர்
உரும்பராய்

# புவனேந்திரன் - ரஞ்சனாதேவி

வாசிகசாலை வீதி, கல்வியங்காடு.

முல்லை அச்சகம், ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org